G.C.E. (A/L) 1987
Physics: VARNAM
நடைபெறுகின்றது.
திங்கள், வெள்ளி;
3-4 ELECTRICITY
திங்கள், வெள்ளி;
4-5 MECHANICS
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

# சஞ்சீவி

விலை ரூ 2/-

அறிவு - ஆக்கம் - அபிவிருத்தி

DAY CLASS
A/L PHYSICS
* MECHANICS *
ஆரம்பம் – 1-12-86
திங்கள் காலை 7-30 மணி
MON-FRI - 7- 30A.M.
by
SATHIYASEELAN
NEW MASTER INSTITUTE
B.M.C. Lane, JAFFNA

மலர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஸு மார்கழி மீ 05 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு ஆகிர் பிறை 17 (20-12-1986) SANJEAVY. REGENERATIVE TAMIL WEEKLY சிகரம் :48

### புலிகள் - சிப்பாய்கள் நேற்றுப் பரிமாற்றம்

# ஈழம் தனிநாடு; லலித் ஏற்றுள்ளார்

## தளபதி கிட்டு சொல்கிறார்

யாழ்ப்பாணம், டிச. 20

தமிழ் ஈழத்தை தனிநாடக ஏற்று அதனை அங்கீகரித்திருக்கிறார் ஸ்ரீலங்கா அரசின் பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி.

--- இப்படிக் கூறினார் புலிகள் தளபதி கிட்டு.

சிப்பாய்கள் – புலிகள் பரிமாற்றம் குறித்து அவர் கூறியதாவது:-

'கைதிகள் பரிமாற்றம் இரு நாடுகளுக்கு இடையில் தான் நடைபெறும். எனவே நாம் கைதிகளைப் பரிமாற மாட்டோம். இது தொடர்பாக தீவிர வாதிகளுடன் பேச நாம் தாயரில்லை— இப்படி அடித்துச் சொன்னவர் அமைச்சர் அத்துலத் முதலி.

ஆனால் இப்பேது கைதிகளைப் பரிமாற்றத்துக்கு முன்னின்று செயற்பட்டிருக்கிறார் அவர்.

ஆகவே அவர் தமிழ் ஈழத்தை ஒரு தனி நாடாக அங்கீகரித்திருக்கிறார் என்றே கருத வேண்டும்.

''கைதிகள் பரிமாற்றம்'' என்ற பெயரில் இந்த விடுவிப்பு நடக்கக் கூடாது என்பதற்காகவே அவர், ஒரு தரப்பினரை யாழ் கோட்டை முகாம் வாசலிலும்---

மற்றைய தரப்பினரை பலாலி முகாம் அருகிலும் விடுவிக்க ஏற்பாடு செய்தார்.

எப்படிப் பார்த்தாலும் இது கைதிகள் பரிமாற்றமே.

--இப்படிக் கிட்டு மேலும் கூறினார்.

(உ-5-10)

# புதிய நம்பிக்கை; முன்னேற வழி கோலும்

## மந்திரி அத்துலத் கருத்து

கொழும்பு, டிச. 20

சிப்பாய்கள் - புலிகள் பரிமாற்றத்தினால் இரு தரப்பிலும் புதிய நம்பிக்கை உணர்வு தோன்றி உள்ளது இது மேலும் முன்னேற்றத்துக்கு வழி கோலக்கூடும்.

--- இவ்வாறு அமைச்சர் அத்துலத் தெரிவித்திருக்கிறார்.

சிப்பாய்களைக் கொண்டு சென்ற விமானம் இரத்மலானை விமான நிலையம் சென்றதும், அங்கு வைத்தே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப்பட்ட இரண்டு சிறீலங்கா சிப்பாய்களுடன் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி நேற்றுக்காலை 11 மணியளவில் விசேட ராணுவ விமானம் ஒன்றில் ரத்மலானை விமான நிலையத்தில் வந்திறங்கினார்.

அமைச்சருடன் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிக்கலை கூட்டுப்படைத்தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்கா, இராணுவத்தளபதி நளின் (8 ஆம் பக்கம் பார்க்க)

நாளைய
உதயனில்
நவீன
கலண்டர்

## கல்முனை பாண்டிருப்பில் மோதல்

கல்முனை, டிச 20

கல்முனை, பாண்டிருப்புப் பகுதியில் இரண்டு இயக்கங்களுக்கு இடையேயான மோதல் நேற்றும் இடம்பெற்றதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

இயக்கம் ஒன்றைச் சேர்ந்த, இரண்டு போராளிகள் நேற்றைய மோதலின் போது உயிரிழந்தனர் என்று அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

(உ-எ-84

## கருத்துக் கலசம்

மயூரா

### தமிழ் வங்கி

தமிழ் முத்தமிழ். செந்தமிழ். நற்றமிழ். நறுந்தமிழ்.

தமிழுக்கு அமிழ்து என்று பேர். இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்.

அந்தத் தமிழை ஆதி காலத்தில் முச்சங்கம் வைத்து வளர்த்தனர் நம்முன்னோர். பின்னர், மன்னர்கள் அதனைப் பேணிக் காத்தனர். முன் தோன்றிய முத்தமொழியாக இன்னமும் அது விளங்குவதற்கு அதனைப் பேணி வளர்த்தவர்களே காரண கர்த்தர்க்கள்.

இனியும் அது வாழ வேண்டும். வளர வேண்டும். வெறும் பழம் பெருமையுடன் நின்றுவிட முடியாது.

உலகளாவிய ரீதியில் அது வளரவேண்டும் நவீன காலத்திற்கு ஏற்ப வளர்ச்சி காண வேண்டும். எதனையும் சொல்லும் ஆற்றல், வளம் அதற்கு இல்லை என்பதை இல்லாமற் போக்க வேண்டும். பழமையைப் பேணிப் புதுமையை புகுத்தி அதனை உலக மொழிகளின் முன் வரிசையில் நிறுத்தவேண்டும்.

இப்படி ஒரு''பித்து'' தமிழ் அபிமானிகள், கவிஞர்கள், புலவர்கள், ஆகியோருக்கு இருக்கும் என்பதில் ஐயமில்லை. அவர்களின் கனவு நனவாக ஒரு நல்வழி இப்போது தெரிகிறது.

ஆம், தமிழ் வளர்ச்சிப் பணிக்கும், தமிழர் கலாசார மேம்பாட்டுக்கும் தேவையான நிதி உதவியை வழங்குவதற்காக, உலகத் தமிழ் வங்கி ஒன்று நிறுவப்பட இருக்கிறது.

இந்த நல்ல செய்தியை உலகத் தமிழ் சம்மேளனத் தலைவர் டாக்டர் டேவிட் அறிவித்திருக்கிறார். அவரது வாயில் கற்கண்டு இடவேண்டும்! தமிழ் வங்கி விரைவில் நிறுவப்பட்டு அது செயற்பட வேண்டும்.

தமிழைப் பேணி வளர்க்க, அதுகுறித்து ஆராய்ச்சி செய்ய, அதன் வரலாற்றை எழுத, அதனை விருத்தி செய்ய, அதனைப் பரப்ப இந்த உலகத் தமிழ் வங்கி பெரும் பங்காற்ற வேண்டும்.

அவை மட்டுமா...?

தமிழர் வாழும் இடங்களில் அவர்கள் வரலாற்றை, கலாசாரத்தை ஆராய்ந்து ஆய்ந்து நிலை நிறுத்துவதும் அவசியம்.

அத்தோடு நிற்பதா? உலகத் தமிழர்கள் எல்லோரையும்,

(8 ம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் நேற்று போர் நிறுத்தம்

யாழ்ப்பாணம் டிச.20

நேற்று நடைபெற்ற கைதிகள் பரிமாற்றத்திற்காக யாழ் குடாநாட்டிற்குள் அரசபடைகள், போராளிகள் அமைப்புகள் ஆகியவற்றிற்கு இடையில் போர்நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது என புலிகள் தளபதி கிட்டு தெரிவித்தார்.

கைதிகள் பரிமாற்றத்திற்கு முன்னர் தொலைபேசி மூலம் இருதரப்பினரும் தங்களுக்குள் பேசி போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றுக்கு வந்ததாக அவர் தெரிவித்தார். (உ-10-5)

## கொத்தலாவலையிடம் சிப்பாய்கள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், டிச. 20

புலிகளினால் விடுவிக்கப்பட்ட இரண்டு சிப்பாய்களையும் யாழ் கோட்டை இராணுவ முகாம் வாசலில் வைத்து காப்டன் கொத்தலாவலை, லெப்டினன்ட் குமுது ஆகியோர் புலிகளிடமிருந்து பொறுப்பேற்றனர்.

புலிகளுடன் முகாம் வாசலில் வைத்து காப்டன் கொத்தலாவலையும் லெப்டினன்ட் குமுதுவும் சினேகபூர்வமாக கைலாகுகொடுத்துஉரையாடினார்கள்.

சுமார்15 நிமிடநேரம் நீடித்த இந்த உரையாடலின் போது புலிகள் தரப்பில் ரஹீம், வாசு, கேடி உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இதன் பின்னர் காலை 8-45 மணியளவில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஜோய், சிப் (8ஆம் பக்கம் பார்க்க)

## காரைதீவில் 30 பேர் கைது

கல்முனை ,டிச.20

காரைதீவுக் கிராமத்தில் நேற்று ஆயுதப்படையினர் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்.

சுமார் 30 கிராமவாசிகள் பொலீஸ்கொமாண்டோக்களினால் விசாரணைக்காக களுவாஞ்சிக்குடி முகாமுக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

(உ-எ-84)

## தொடர்ந்து மறியல்

யாழ்ப்பாணம் டிச,20

யாழ்-மாவட்டத்தில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகள் முன்பாக நேற்று இரண்டாவது நாளாக மறியல் போராட்டம் நடத்தப்பட்டது.

நூற்றுக்கும் மேற்பட்டோர் மறியல் போராட்டங்களில் கலந்து கொண்டனர்.(உ-10)

### சுபநேரம்

20—12—1986

சனிக்கிழமை

சுபநேரம்:

3.24 முதல் 4.54 வரை

ராகுகாலம்:

9.24 முதல் 10.54 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்



விடுவிக்கப்பட்ட செல்வகுமாரை அவரது தாயார் கட்டியணைத்து கண்ணீர் மல்க வரவேற்கும் காட்சி.

## அந்த விமானம்

கொழும்பு, டிச. 20

ஜனாதிபதி ஜெயவர்த்தனஉபயோகிக்கும்பிரத்தியேகராணுவ விமானத்தில் தான் நேற்று தேசிய பாதுகாப் அமைச்சர் லலித் அத்துலத்முதலி பலாலி முகாமுக்கு வந்தார்.

ஜனாதிபதி இந்த விமானத்தையே தனது உத்தியோக அலுவல்களுக்குப் பிரத்தியேகமாகப் பயன்படுத்தி வருகிறார்.

(அ-ஐ-எ)

## கைதிகள் பரிமாற்றம் நேற்றுக் காலை நடந்தது

யாழ்ப்பாணம், டிச. 20

தமிழீழ விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்ட இரண்டு சிப்பாய்களையும் விடுவிக்கும் விடயத்தில் புலிகள் தாம் விதித்த நிபந்தனையில் வெற்றிகண்டுவிட்டனர்.

புலிகளின் நிபந்தனைக்கு அமைய கைதிகள் பரிமாற்றத்துக்கு அரசு இணங்கியதன் மூலம் இலங்கை அரசு தனது 'விடாப்பிடி' நிலையிலிருந்து இறங்கிக்கொண்டது.

அரசு இணங்கியதையடுத்து கைதிகள் பரிமாற்றம் நேற்றுக்காலை யாழ் குடாநாட்டில் இடம் பெற்றது.

அரசாங்கத்தின் தரப்பில் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி நேரடியாக கைதிகள் பரிமாற்ற நிகழ்ச்சியில் பங்கு கொண்டார்.

பாதுகாப்புப் படையினரும், விடுதலைப் புலிகளும் ஏற்கனவே தொலைபேசியில் பேசி எடுத்துக் கொண்ட இணக்கமான முடிவுக்கு அமைய கைதிகள் பரிமாற்ற நடவடிக்கைகள் இடம் பெற்றன.

நேற்றுக்காலை 8-45 மணியளவில், பலாலி இராணுவ முகாமுக்கு (8 ஆம் பக்கம் பர்க்க)

## வங்கி ஊழியர் 9 பேர் திருமலையில் கைது

திருகோணமலை, டிச. 20

திருகோணமலையில் பணியாற்றும் இலங்கை வங்கி ஊழியர்களில் இதுவரை மொத்தம் ஒன்பது தீவிரவாத இயக்கங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பூஸா தடுப்பு முகாமில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஒன்பது பேரில் இரண்டு பேர் பெண் ஊழியர்கள். (உ-எ-150)

## பலாலி முகாம் வாசலில் புலிகளை லலித் வழியனுப்பினார்

யாழ்ப்பாணம், டிச.20

விடுவிக்கப்பட்ட புலிகள் இயக்கப் போராளிகள் இருவரையும் பலாலி இராணுவ முகாம் வாசலில் வைத்து தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலியே வழியனுப்பி வைத்தார்.

கைதிகள் விடுவிப்புத் தொடர்பான நடவடிக்கைகளை நேரில் கவனிப்பதற்தாக அமைச்சர் அத்துலத்முதலி நேற்று அதிகாலை பலாலி முகாமுக்குப் பறந்துவந்தார்.

அவருடன் எட்டியாந்தோட்டை எம். பி.

(8-ஆம் பக்கம் பார்க்க)

## முன்னேற்றம் இன்றி முடிந்தது பேச்சு

கொழும்பு, டிச. 20

முன்னேற்றம் எதுவும் காணப்படாத நிலையில் சிதம்பரம் குழுவின் மூன்றுநாள் பேச்சுக்கள் நேற்றுக் கொழும்பில் முடிவடைந்தன.

நேற்றுக்காலைஒன்றரை மணித்தியாலங்களும் மதிய போசனத்தின் பின்னர் ஒன்றரை மணித்தியாலங்களுமாக ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் சிதம்பரம் குழு பேசியது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தமிழர் தாயகமாக ஏற்றுக் கொள்ள முடியாது என்பதற்கு இலங்கைத் தரப்பினர் சரித்திரச் சான்றுகளைச் சிதம்பரம் குழு முன்னர் சமர்ப்பித்தனர்.

### தமிழர் தாயகம்

தமிழர் தாயகம் என்ற நிலைப்பாட்டுக்கு ஆதாரமாக தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்த வரைபடம், சரித்திரச் சான்றுகளுக்குப் பதில் அளிக்குமாற்போல், இலங்கை அரசு இவற்றைச் சமர்ப்பித்தது

வடக்கு, கிழக்கு பற்றிய புதிய வரைபடம் ஒன்றையும் இலங்கை அரசு சமர்ப்பித்தது.

பேச்சுக்களின் ஒரு கட்டத்தில் அம்பாறை தேர்தல் தொகுதியை விடு (8ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே


உள்ளும் புறமும் உலக உலா
2 ஆம் பக்கத்தில்
நெடுமாறன்பேட்டி
7 ஆம் பக்கத்தில்
விடுவிக்கப்பட்ட புலிகள் பேட்டி
7, 8ஆம் பக்கங்களில்
சிவாஜி பற்றி கருணாநிதி
6 ஆம் பக்கத்தில்
பகத் சிங் வீரவரலாறு
3 ஆம் பக்கத்தில்

## இந்தியக்குழு திரும்பியது

கொழும்பு, டிச 20

மூன்று நாள் பேச்சுக்களை முடித்துக்கொண்டு சிதம்பரம் குழு நேற்று மாலை கொழும்பில் இருந்து புறப்பட்டது.

வெள்ளி இரவு பப்பாயில் தங்கிவிட்டு சனி காலை புதுடில்லியை சிதம்பரம்குழு அடையும் என்று இந்திய தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)



விடுவிக்கப்பட்ட புலிகள் இயக்க போராளிகள் இருவரும் தளபதி கிட்டுவுடன் காணப்படுகின்றனர். இடது பக்கத்தில் இருப்பவர் காமினி வலது பக்கத்தில் இருப்பவர் செல்லகுமார் (குஞ்சு)

## எரிபொருள் விலை குறைப்பு

யாழ்ப்பாணம் டிச 20

டிசம்பர் மாதம் 25ஆம் திகதி முதல் டீசல் ஒரு லீற்றர் 11 ரூபா 50 சதமாகவும் மண்ணெண்ணை 9 ரூபா 50 சதமாகவும் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

இதனை தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் நேற்று அறிவித்தனர். (அ-10 )

GLORIA
TRAVELS
● கனடா ● நோர்வே
● பிரான்ஸ் ● ஜேர்மனி
ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன்
நோர்வே, கனடா செல்வதற்கு உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.
* நோர்வே செல்லும் அரிய வாய்ப்பைப் பயன்படுத்துங்கள்.
மற்றும்
பாஸ்போட், பொண்ட் (BOND)
விசா, ரிக்கற்
ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.
GLORIA TRAVELS
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினை இப்போது கிழக்கே போகும் ரயிலா?

கிழக்கு வெளிக்கிறத இனி இருள் அகன்று விடும். இப்படி ஓர் அனுபவமொழி.

இலங்கை அரசியலிலோ "கிழக்கு குழம்பிக் கொண்டிருக்கின்றது"– எப்போது ஒளி தென்படும்? என்பது கேள்விக் குறியாக மாறி விட்டது.

இணைவது ஒன்றுக்கு வதில் இருந்த சிக்கல், இப்போது ஒன்றை மூன்றாக்கி அந்த மூன்றில் ஒன்றைஇன்னும் ஒன்றுடன் சேர்ப்பது எப்படி என்பதை ஆராயும் அளவுக்குப் போய்விட்டது.

இதுதானா இடியப்பச் சிக்கல் என்பது?

சிக்கலின் அடியைக் கண்டுபிடித்துப் பின்னர் நுனியைக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர் சிதம்பரம் குழுவினர்.

சிதம்பரம் குழுவின் மூன்றுவது கொழும்பு விஜயம் இது முதலாவது விஜயம் ஜூலையில் இடம்பெற்றது.

இரண்டாவது விஜயம் ரஷ்யத் தலைவர் கோர்பச்சேவ் புதுடில்லி வந்திறங்குவதற்கு முதல் நாள் இரவு இடம்பெற்றது.

தற்சமயம் நடைபெற்று முடிந்தது மூன்றுவது விஜயம்.

## யானை பார்த்த கதை

இப்போதுதான் இனப்பிரச்சினையின் இறுதிக் கட்டம். இவ்வளவு காலமும் இனப்பிரச்சினையை அணுகிய முறை 'யானையைப் பார்த்த குருடன்' கதை மாதிரி இருந்தது.

கண்ணை மூடிக்கொண்டு தடவிப் பார்த்து அது தலை இது செவி என்று கூறப்பட்டதே தவிர வேறு ஒன்றும் இடம் பெறவில்லை.

இப்போதுதான் இரு பக்கத்தினரும் கண்களைத் திறந்து பார்த்து இணைப்புதான் தீர்வுக்கு முட்டுக் கட்டையாக உள்ள ஒரே ஒரு பிரச்சினை என்று கண்டுபிடித்துள்ளனர்.

## மூடு மந்திரம்

இதுவரை காலமும் நடந்த பேச்சுக்களின் போது மூடிமூடி மறைக்கப்பட்டு வந்த மூடுமந்திரத்தைக் கண்டுபிடித்து வைத்தியம் செய்ய ஒரு 'சிதம்பரம் குழு' வர வேண்டியதாயிற்று.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியா தற்போது ஒரு சூத்திரத்தைத் தயாரித்துள்ளது என்பது வெளிவந்துள்ளது.

இந்தியாவின் கருத்துக்கள், யோசனைகள் அந்தச் சூத்திரத்தின் அடிப்படையில் தான் அமையும்— இப்படி இந்தியத் தூதர் டிக்ஸிற் சிதம்பரம் குழுவின் 3 ஆவது விஜயத்துக்கு முதல் நாளே கொழும்பில் ஜனாதிபதியிடம் தெரிவித்துவிட்டார்.

இலங்கைத் தமிழரின் அடிப்படை விருப்பங்களை நிறைவேற்றுவதாகவும், இலங்கையின் ஒற்றுமை, ஒருமைப்பாடு பாதிக்கப்படாமல் இருக்கும் விதத்திலும், பெரும்பான்மை இனச் சிங்கள மக்களின் அச்சத்தைப் போக்கும் விதத்திலும் அமையக் கூடிய தீர்வு ஒன்றையே இந்தியா காண விரும்புகின்றது.

இதுதான் இந்தியாவின் தற்போதைய 'சூத்திரம்'

## சிதம்பர ரகசியம்

அத்தீர்வு எப்படி அமையும்? அந்த சிதம்பர ரகசியத்தை வெளிப்படுத்துவதில் சிதம்பரம் குழுவினர் கொழும்பில் ஈடுபட்டனர்.

'வடக்கு மாகாணம் ஏற்கனவே தமிழ் மாகா

## இந்தியா பிரதம சாரதி

ணம் கிழக்கிலே ஒரு பூரண தமிழ் மாகாணம்.

'இந்த இரண்டு மாகாணங்களையும் தமிழர் தாயகம் என்று ஏற்றுக் கொள்ள வேண்டும்

'இணைப்பைத்தான் இலங்கை கடுமையாக எதிர்க்கிறது. ஆகவே இரண்டு தமிழ் மாகாணங்களுக்கும் இடையே ஏதாவது ஒரு வகையான நிர்வாக இணைப்பை ஏற்

உள்ளும் புறமும்

குறுமுனி

படுத்துவது'— இவைதான் இந்தியாவின் மத்தியஸ்த யோசனைகள் என்று கொழும்பு அரசு தரப்பினருக்குக் கூறப்பட்டு விட்டதாம்.

இதே நேரத்தில் சென்னையில் தமிழர் அமைப்புக்களை சிதம்பரம் குழு சந்தித்துப் பேசியது தெரிந்ததே

அப்போது தமிழர் குழுக்களிடமிருந்து ஓர் உறுதிமொழியை சிதம்பரம் குழு பெற்றதாக சென்னைத் தகவல் ஒன்று கூறுகிறது.

இலங்கைத் தமிழரின் அடிப்படை விருப்பங்களை மையமாக வைத்து இந்தியா தயாரிக்கும் யோசனையை தமிழர் குழுக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே அந்த சிதம்பரம் குழு பெற்ற உறுதி மொழி.

## நிலைமை இதுதான்

தற்போதுள்ள நிலையில் இணைப்பை இந்தியா நிர்ப்பந்திக்காது என்பதைத் தமிழர் ஏற்றுக் கொள்ளா விட்டாலும், அந்த இந்திய வாதத்தில் உள்ள தர்க்கத்தை நாம் ஆராய்ந்து பார்த்தால் சில உண்மைகள் வெளியாகும்,

கிழக்கிலே ஒரு பூரண தமிழ் மாகாணம் அத்தமிழ் மாகாணத்தின் ஆட்சியை நிர்ணயிப்பதில் முஸ்லிம், சிங்களவர் ஈடுபடப்போவதில்லை; ஈடுபடவும் முடியாது. காரணம் அவர்களுக்கு என்று ஒவ்வொரு மாகாணம் தனியாக கிழக்கில் கொடுக்கப்படும்

இந்த நிலையில் கிழக்கு மாகாணத்தில் உருவாகும் தமிழ் மாகாணத்தை வடக்குடன் சேர்க்க வேண்டும் என்பதை நிர்ப்பந்திப்பது சரியல்ல இப்படி இந்தியா கருதுகிறது.

கிழக்கு முழுவதற்கும் ஒரு மாகாண சபை என்று கூறியபொழுது இந்தியா இணைப்புப்பற்றி கருத்தே தெரிவிக்காது இருந்து வந்தது

இலங்கை அரசு இப்போதுபடி இறங்கி வந்து கிழக்கில் தமிழருக்கு ஒரு மாகாணத்தை வழங்க முன் வந்துள்ளதை இந்தியா தக்கபடி பயன்படுத்த நினைத்திருக்குமோ?

அந்த மாகாணத்தையும் தமிழர் தாயகமாக அங்கீகரிக்கச் செய்து வடக்குத் தமிழர் மாகாணத்துடன் ஏதாவது ஒரு வகையிலான நிர்வாக இணைப்பை ஏற்படுத்துவதில்தான் இந்தியா அக்கறை காட்டுகிறது

## எந்த அடிப்படையில்

கிழக்கில் உருவாகப் போகும் அத்தமிழர் மாகாணம் எந்த ஆண்டின் இனவிகிதாசாரத்தின் படி அமையவேண்டும்?

1921 குடிசனக் கணக்கெடுப்பின்படி என்று தமிழர் அமைப்புக்கள் கூறுகின்றன.

1921 இன்படி தமிழர் 55%: முஸ்லிம் 41%: சிங்களவர் 04%.

1981 குடிசனக் கணக்கெடுப்பின்படி என்று இலங்கை அரசு கூறுகிறது.

1981 இன்படி தமிழர் 43%; முஸ்லிம் 38%; சிங்களவர் 29%.

இந்தியா, தமிழர் அமைப்புக்களின் நிலையைத் தான் ஆதரிப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

இருப்பினும் மத்தியஸ்தர் என்ற நிலையில் சுதந்திரம் பெற்ற ஆண்டின் குடிசனக் கணக்கெடுப்பையோ, அல்லது தற்போதைய தர்மிஷ்டர் இணைப்பை முதன் முதலாக எதிர்த்த 1957 ஆம் ஆண்டின் குடிசனக் கணக்கெடுப்பையோ அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்று இந்தியா கூறக்கூடும்.

1957 இல் வடக்கு-கிழக்கு இரண்டும் சேர்ந்தால் தமிழர் தாயகம் உருவாகிவிடும் என்று தர்மிஷ்டர் எதிர்த்தார்.

இன்று இரண்டையும் சேர்க்காமலே தமிழர் தாயகத்தை உருவாக்கும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டுள்ள என்றும் கூறலாம் அல்லவா!

## இதுவும் ஒரு காரணமோ

தமிழருக்கு வழங்கப்படும் மாகாணங்கள் இரண்டும் தனித்தனியாக இருக்கவேண்டும் என்பதை இந்தியா இன்னொரு காரணத்துக்காகவும் விரும்பக்கூடும் என்றும் வேறு ஒரு தகவல்.

கிழக்கிலே 4 லட்சம் தமிழருக்கு ஒரு தமிழ் மாகாணம் அதிலும் குறைந்த எண்ணிக்கையில் உள்ள முஸ்லிம், சிங்களவருக்கு தனித்தனி மாகாணசபை

இப்படி தனியாக இயங்கவிட்டால், ஒரு காலத்தில் மலைநாட்டில் சுமார் 10 லட்சம் மலையகத் தமிழருக்கு ஒரு மாகாணசபை அமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை எழும்போது அதை நியாயப்படுத்த முடியும் இப்படி இந்தியா எண்ணியிருக்கலாம். இதுவே அந்தக் காரணம் என்று அக்கறை வட்டாரங்கள் கூறுகின்றன

ஏற்கனவே இனப்பிரச்சினைத் தீர்வுகாண்பதில் கிழக்குக் குழம்பிப் போய்க் கிடக்கிறது.

இவற்றையும் கூறி மேலும் குழப்புவானேன்!

முதலில் 'கிழக்கே போகும் ரயில்' சரியான நிலையத்தைப் போய் அடைகிறதா என்று பார்ப்போமே...!

## அரசாங்க அலுவலகங்களில்....

"சிகதி"

### பாடசாலைகளும் பாதுகாப்பும்

பாடசாலைகளை பாதுகாக்க, பாதுகாப்புச் சபைகள் வேண்டியதன் அவசியத்தை யாழ் கல்விப்பணிப்பாளர் வலியுறுத்தியுள்ளார். இது கல்வி அமைச்சின் பணிப்புரையாக இருந்தாலும் கூடச் சில பாடசாலைகள் சரியான முறையில் இயக்கப்படவில்லை என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். எதிர்கால சந்ததியினரை உருவாக்க வேண்டிய அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலைகளின் முன்னேற்றத்திற்கு தங்களை அர்ப்பணித்தல் வேண்டும். பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்களினால் தங்கள் சொந்தத்தேவைகளுக்காக கடமை நேரங்களில் பயன்படுத்தப்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டிற்கு இடமளிக்கக்கூடாது. அதிபர்கள், ஆசிரியர்களுக்கு எதிராகப் பெற்றோர்களினால் செய்யப்படும் புகார்களை உரிய முறையில் வட்டாரக் கல்வி அதிகாரிகள் விசாரணை செய்து நீதி வழங்க வேண்டும் இப்படிச் செய்வதினால் பாடசாலைகளும் பாதுகாக்கப்படும்; மாணவர் கல்வியும் பேணப்படும்.

* *

தாமதிக்கப்படும் நீதி-மறுக்கப்படும் நீதி என்று கூறப்படுகிறது ஒருவகையில் பார்த்தால் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் நிவாரணம் விமோசனம் முதலியன வேண்டி நிற்பவர்களே நீதித்துறையில் ஏற்படும் தாமதம் அண்மையில் பிரதம நீதி அரசையே கண்டிப்பான கருத்துக்களை பேச வைத்துள்ளது நீதித்துறை சேவையாளர் வருடாந்த சங்க மாநாட்டில் பிரதம நீதி அரசர் உரையாற்றியபோது மக்கள் நீதிமன்றங்களில் நம்பிக்கை இழந்தால் அவர்கள் அதற்கான பரிகாரத்தைத் தெருக்களுக்கு எடுத்துச் சென்றுதான் காணுவார்கள் என்று குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் நீதித்துறை சேவையாளர் சங்கம் தங்கள் குறைபாடுகளை நேரடியாக நீதித்துறை சேவை கமிஷனுக்கே எடுத்துச் செல்ல வேண்டும் எனவும் தீர்மானித்துள்ளது நீதித்துறை அமைச்சிற்கு இவற்றினை எடுத்துச் செல்வதால் நீதித்துறை தந்திரம் பேணப்பட மாட்டாது என்பது சங்கத்தின் உள்நோக்காகும் இலகுவான விடயங்களில் கூட துரிதமாக கையாள முடியாத நீதிபதிகள் சேவைக்கு களங்கம் கற்பிக்காது சேவையை விட்டு விலகுவதால் அச்சேவையின் நற்பெயர் பேணப்படலாம் என்றும் பிரதம நீதி அரசர் கருத்து தெரிவித்திருந்தது, நீதி மன்றங்களில் ஏற்படும் தாமதத்தை மேலும் துலாம்பரமாக்கியுள்ளது

சுதந்திரமான முறையிலும் தலையீடு இன்றியும் செயற்படும் நீதி மன்றங்கள் தாமதங்களை தவிர்க்க வேண்டிய முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொள்ளின் குறைபாடுகளை தவிர்க்கலாம். ஆனால் நீதிபதிகளுக்கு தகுந்த சம்பளம், கட்டடங்கள், தளபாடங்கள், போக்குவரத்து வசதி முதலியனவற்றை உரிய திணைக்களங்கள் உடன் செய்தும் உதவ வேண்டும்.

* *

உதவி அரசாங்க அதிபர்கள் எல்லைக்குட்பட்ட பிரதேச சபைகள் அமைப்பதற்கான சட்ட நகல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பரவலான நடைமுறை செயற்பாடுகளை நிர்வகிக்க அதிகாரமும், உத்தேசிக்கப்பட்ட சபைகளின் மூலம் வழங்கப்பட இருக்கிறது. ஏற்கனவே உருவாக்கப்பட்ட கிராமோதய பிரதேச சபைகளினால் எந்தவித நன்மையும் பெற முடியவில்லை எனப் பல அரசாங்க நாடாளுமன்ற அங்கத்தவர்கள் ஏற்கனவே கருத்துத் தெரிவித்த பின்பும் இப்படியான வலுவற்ற நடைமுறைகளை அரசு மக்களுக்கு அறிமுகப்படுத்து வதன் நோக்கம் புதிராக உள்ளது. *

## அருணாச்சல் விவகாரத்தால்

# இந்திய-சீனஉறவில் மீண்டும் நெருக்கடி நிலை

அருணாச்சல் பிரதேசம் இந்தியாவின் மாநிலங்களில் ஒன்றாகப் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.

இது இந்தியாவின் 24 ஆவது மாநிலம் ஆகும்.

அருணாச்சல் பிரதேசம் இதுவரை இந்திய மத்திய அரசின் நேரடி ஆட்சியின் கீழ் உள்ள யூனியன் பிரதேசமாக இருந்தது

இந்திய அரசாங்கம் இவ்வாரம் லோக சபையில் சட்ட மூலம் ஒன்றைக் கொண்டுவந்து, அருணாச்சல் பிரதேசத்துக்கு மாநில அந்தஸ்தை வழங்கியது.

அருணாச்சல் பிரதேசம் இந்திய — சீன எல்லையில் உள்ளது இதன் விஸ்தீரணம் 31,500 சதுர மைல்கள் சனத்தொகை 6 லட்சத்து 20ஆயிரம்.

திடீர் என இதற்கு மாநில அந்தஸ்து வழங்கப்பட்டது சீனாவுக்கு ஆத்திரத்தைக் கிளப்பி விட்டிருக்கிறது

இதனைக் கண்டித்து சீன வெளிவிவகார அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது

மாநில அந்தஸ்து வழங்கியது மூலம் அருணாச்சல் பிரதேசத்தில்தான் ஆக்கிரமித்துள்ள பகுதிக்கு இந்தியா உள்நாட்டில் சட்டரீதியான அங்கீகாரம் பெற முனைகிறது என்று சீனா குற்றஞ்சாட்டி இருக்கிறது

பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்றும் சீனா எச்சரித்துள்ளது

அருணாச்சல் பிரதேசத்தில் சீனா—இந்திய எல்லையில் ஒரு பகுதிக்கு சீனா நீண்ட காலமாக உரிமை கோரி வருகிறது

அருணாச்சல் பிரதேசத்துக்கு மாநில அந்தஸ்து கொடுத்தது மட்டும் அன்றி அதன் ஆளுநருக்கு விஷேச அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதும் சீனாவின் ஆத்திரத்துக்குக் காரணம் ஆகும்.

சீன எல்லையில் அதன் கேந்திர முக்கியத்துவத்தைக் கருதி ஆளுநருக்கு சட்டம், ஒழுங்குத் துறைகளில் விசேஷ அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன

ஏற்கனவே பஞ்சாப் பிரச்சினை தொடர்பாக பாகிஸ்தானுடன்மோதிக் கொள்ளும் நிலையில் உள்ள இந்தியாவுக்கு சீனாவின் மிரட்டல் மற்றொரு சவால் என்று அவதானிகள் கருதுகின்றார்கள்.

1949ஆம் ஆண்டு மாவோ துங் தலைமையில் சீனாவில் கம்யூனிஸ்ட் புரட்சி ஏற்பட்ட நாளில் இருந்து சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் எல்லைத் தகராறும் இருந்தே வருகிறது.

எனினும் பஞ்சசீலக் கொள்கை என்ற பெயரில் இந்தப் பூசல்கள்

## உலக உலா

என்.பி.சீலன்

மூடிமறைக்கப்பட்டு வந்தன,

அப்போதையஇந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவும் சீனப் பிரதமர் சௌ-என்-லாயும் பாண்டுங் தீர்மானத்தின் அடிப்படையில் பஞ்சசீலக் கொள்கையை ஏற்று நட்புறவு நாடுகளாகத் தம்மைப் பிரகடனப்படுத்திக் கொண்டனர்.

ஆனால் இந்த நிலைமை சுமார் பத்து ஆண்டுகளே நீடித்தது.

திபெத்தில்இருந்து சீனாவினால் துரத்தப்பட்ட தலாய்லாமாவுக்கு இந்தியா புகலிடம் அளித்த சம்பவம், சர்ச்சைக்குரிய லடாக் பகுதியில் சீன இராணுவத்தின் பிரவேசத்தால் மூண்ட இந்திய சீன யுத்தம் ஆகியவை இந்தியாவையும் சீனாவையும் முதலாம்தர எதிரி நாடுகளாக மாற்றின.

சீனாவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையில் சித்தாந்தத் தகராறு ஏற்பட்டது இந்தியா—சீன நெருக்கடியில் சோவியத் யூனியனின் மத்தியஸ்த வாய்ப்பையும் இழக்கச் செய்தது சீன-இந்திய உறவு அபிவிருத்தி அடைவதற்கும் தடையாக மாறியது.

இந்திரா கொலையை அடுத்து அண்டை நாடுகளான சீனா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை ஆகியவற்றுடன் நல்லுறவை ஏற்படுத்தும், முயற்சிகளை பிரதமர் ராஜீவ் காந்தி மேற்கொண்டிருந்தார்

ஆனால் இன்று எல்லை நாடுகளுடனான சம்பவங்கள் மீண்டும் இந்திராவின் ஆட்சிக் காலத்தை நோக்கி ராஜீவைஇட்டுச் செல்வதாகவே தோன்றுகிறது. *

## நாணயமாற்று விகிதம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விவரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகிறது (இது இலங்கை வங்கியின் 19 ஆம் திகதிய மாற்று விகிதமாகும்.)

| வெளிநாட்டு நாணயம் | இலங்கையில் (ரூபா சதத்தில்) |
|---|---|
| ஸ்ரேலிங் பவுண் | 40.29 |
| அமெ. டாலர் | 28. 39 |
| இந்திய ரூபா | 2. 14 |
| மார்க் ஜேர்மனி | 14. 02 |
| கனடா டாலர் | 20. 31 |
| பிராங் (பிரெஞ்சு) | 4. 28 |
| பிராங் (சுவிஸ்) | 15. 48 |
| அவுஸ். டாலர் | 18. 61 |

## சுன்னாகத்தில் திருவாசகம் முற்றோதல்

யாழ்ப்பாணம், டிச. 20 சுன்னாகம் மயிலணி அருள்மிகு கந்தசாமி கோயிலில் நாளை ஞாயிற்றுக்கிழமை (21-12-86) காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை திருவாசகம் முற்றோதல் நடைபெறும்.

ஆலயத்தின் பிரதம சிவாசாரியார் பிரம்மஸ்ரீ ச. வரதராஜேஸ்வரக் குருக்கள் நிகழ்ச்சியைத் தொடக்கி வைப்பார். (அ)

## செவன உதவி

கரவெட்டி டிச 20 செவன நிதித்திட்டத்தின் கீழ் கரவெட்டி உதவி அரசாங்க அதிபரினால் ஏழைக் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

செவன நிதித்திட்டத்தின் கீழ் மிகவும் வறிய பத்து குடும்பங்களுக்கு ஏற்கனவே முதல் கட்ட நிதி வழங்கப்பட்டது

இதில் இரண்டு வீடுகள் முடிக்கப்பட்ட நிலையில் உள்ளன

(இ-70)

## ஆசிரியர்களுக்கு பரீட்சை

யாழ்ப்பாணம், டிச. 20 ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைகளில் ஆங்கிலப் பயிற்சி நெறி அனுமதிக்காக இம்மாதம் 27-ஆம் திகதி பிரவேசப்பரீட்சை நடத்தப்பட உள்ளது.

இதற்கான அனுமதிக் கடிதங்களை ஆங்கிலப் பிரிவு அனுப்பியுள்ளது.

(உ-எ)


விற்பனைக்கு

ஒரு மாதம் HY-LINE பேட்டுக்குஞ்சு விற்பனைக்குண்டு. அத்துடன் ஒரு நாள் HY-LINE பேட்டுக்குஞ்சு. ஒரு நாள் BAIRAHA இறைச்சிக் குஞ்சு ஓடருக்கு எடுத்துக் கொடுக்கப்படும்.

தொடர்பு: இராசா போ. ஜெஸ்ரோர், நெல்லியடி மத்திய சந்தை முன்பாக)



Lanka Cement Ltd

KANKESANTHURAI

POSTS OF DIVERS

லங்கா சீமெந்து லிமிடெட்

காங்கேசன்துறை

பதவி வெற்றிடங்கள் - சுழி ஓடுனர்

இலங்கா சீமெந்து லிமிடெட் காங்கேசன்துறை துறைமுகத்தில் சுழி ஓடுனருக்கான (Divers 6 வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படவுள்ளன தகைமையுடைய விண்ணப்பதாரர்கள் வ. சீ லிமிடெட், காங்கேசன்துறை. துறைமுகத்தில் அதிகாரியின் காரியாலயத்தில் அலுவலக நேரங்களில் 22 12-86 திங்கள் 23-12-86 செவ்வாய், 24-12-86 புதன் வரையிலான நாட்களில் சமுகமளிக்கவும்

சுழி ஓடுபவர் 25' - 30' வரை ஆழமுடைய துறைமுகத்தில் பிராணவாயு போத்தலுடன் (With aid of oxygen Cylinder) சுழி ஓடத் தகைமையுடையோராக இருத்தல் வேண்டும்

பொது முகாமையாளர்

லங்கா சீமெந்து லிமிடெட்.



ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சை

விசேட பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்- 21-12-86

(காலை 9 00 மணி)

(10 வகுப்புகள்—20 மணித்தியாலங்கள்)

ஆசிரியர்: T. N. பஞ்சாட்சரம்

* இலவச பாடக் குறிப்புகள்

* கட்டணம் ரூபா 100/-

ASTAN INSTITUTE

101, STANLEY ROAD. JAFFNA.

(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)



இலங்கையில்

முதல் ஓடியோ கிளப்

ஆரம்பித்த

ஒரு வருட நிறைவை

முன்னிட்டு

நியூ விக்ரேஸ்

நத்தார் - புது வருட

மலிவு விற்பனை

* சிறுவர்களுக்கு ஏற்ற விளையாட்டுப் பொருட்கள் (ரூபா 15/- முதல் 200/- வரை)

* பாடல்கள் பதித்த ஓடியோ C 60 மக்சல் கசற் (ரூபா 29-50)

(புதிய சினிமாப் பாடல்கள் ஒலி 1 முதல் 90)

(பழைய சினிமாப் பாடல்கள் ஒலி 1 முதல் 69)

(பக்திப் பாடல்கள் ஒலி 1 முதல் 53)

(கதை வசனங்கள் ஒலி 1 முதல் 30)

நாதஸ்வரங்கள், கச்சேரிகள், நகைச்சுவைகள் இன்னும் பல

முடிவு: 1—1—1987

நியூ விக்ரேஸ்

23, மணிக்கூட்டு வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23532


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பஞ்சாப்பின் இளங்கதிர்; வீறுகொண்டு எழுந்த விடலை!

பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் மூன்று இளைஞர்களும் ஆங்கிலேய கொடுங்கோன்மை ஆட்சியினால் பாரதத்தில் தூக்கிலிடப்பட்டவர்கள்.

மூவரும் இறுதி மூச்சு வரை தாய்த்திருநாட்டின் விடுதலைக்காக வீறு கொண்டெழுந்த விடலை

## அத்தியாயம் ஒன்று

கள்.

தமது நாடு சுதந்திரம் பெறவேண்டுமென்பதற்காகத் தமது இன்னுயிரையே விலைபேசியவர்கள்.

இலட்சியத்திற்காக ஊண் உறக்கம் மறந்து செயற்பட்ட பத்தரை மாற்றுத் தங்கங்கள்.

"செயல் அல்லது செத்துமடி" என்பதற்கு உதாரண புருஷர்களாகத் திகழ்ந்தவர்கள்.

"இன்பமுறை வரினும் செய்க துணிவாற்றி இன்பம் பயக்கும் வினை" என்ற வள்ளுவன் வாக்கிற்கு இலக்கணமாக வாழ்ந்து தூக்கில் தொங்கியவர்கள்.

இக்கால இளைஞர்களுக்கு இவர்கள் ஓர் உந்து சக்தியாயினர்.

பிறப்பு—

இறப்பு—

இந்த நாள்களெழுத்துக்களுக்கிடைப்பட்ட காலத்தில் மனிதன் என்னும் எண்ணங்களோ செய்யும் செயல்களோ கோடானு கோடியிருக்கும்.

அஞ்சினர்க்குச் சத மரணம், அஞ்சாதோர்க்கு ஒரு மரணம்; அது மான மரணம்; வீரமரணம்.

மரணத்தை மகிழ்ச்சியுடன் ஏற்ற பகத்சிங் 'வந்தே மாதரம்!' 'சுதந்திரம் எமது பிறப்புரிமை' என முழக்கமிட்டு மாண்டவரலாறு பாரத

### பகத்சிங் வீரவரலாறு

சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட வரலாறு.

பாரதத்தில் மட்டுமல்ல உலக நாடுகள் அனைத்திலும் அவ்வப்போது இளங்கதிர்கள் தோன்றி அடிமை இருளை அகற்றியிருக்கிறார்கள்.

பல நாட்டு இளைஞர்களின் எழுச்சி வரலாறுகள் எம் கண்முன் நிழ



லாடுகின்றன.

அயல் நாட்டினர் வைத்த மண்ணாசையின் கொடுமையை விளக்கப் பிரான்சு நாட்டு வீரமங்கை 'ஜோன் ஒவ் ஆர்க்' பதினேழு வயதுப் பருவமங்கையாக இருக்கும்போதே போருக்குப் புறப்பட்ட வரலாறு 1428ல் நிகழ்ந்தது.

திருப்பூர்க் குமரன் வெள்ளையன் ஆண்ட பாரதத்துக்கு விடுதலை பெற துப்பாக்கியைத் தொடாது குருதி சிந்தாமல் சத்தியாக்கிரகத் துப்பாக்கியைக் கண்டுபிடித்தார் காந்திஜி. இவரது சத்தியாக்கிரகப் போராட்டத்தில் தன்னுயிர் ஈந்தான் குமாரசுவாமி என்ற திருப்பூர்க் குமரன். நாட்டிற்காக அவன் தன்னைத் தந்த போது அவனுக்கு வயது

### புத்தொளி

இருபத்தெட்டு

திருப்பூர்க் குமரன் போல் பஞ்சாப்பில் பிறந்து தேச விடுதலைக்காகப் பலாத்காரம் பிரயோகித்துத் தூக்குக் கயிற்றை முத்தமிட்டான் பகத்சிங். தன் தாய் நாட்டிற்காகத் தன்னை அர்ப்பணித்த போது அவனுக்கு வயது இருபத்தினான்குதான்.

பகத்சிங்கும் அவனது தோழர்களும் வெள்ளையரின் ஆட்சியால் அடி உதைபட்டு தூக்கு மேடையில் நின்று தாமாகவே உயிர்துறக்க முன்வந்த வரலாறு போல் முன் எப்போதும் வர

(7-ம் பக்கம் பார்க்க)

# பத்தாவிற்கு ஏற்ற பதிவிரதை
## தூய அன்னை சாரதாதேவி

நாயகனுடைய வாழ்க்கை இலட்சியத்தில் பற்றுக்கொண்டு அதற்கேற்ப தனது வாழ்க்கையை அமைத்துக்கொள்பவனே தர்ம பத்தினியாவாள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பின்பற்றிய மிகத் தூய நெறியையே தன்னுடைய தாகக் கொண்டவர் அன்னை ஸ்ரீ சாரதா தேவி. பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய ஆன்மீக வாழ்க்கைத் துணைவி. தூய அன்னை என்று பலரால் அழைக்கப்பட்டவள்.

பாரத தேசத்தில் அவதரித்த பெண்மணிகளுள் மிகச்சிறந்தவர் இவரிடத்தில் ஒரு இலைத் தாளுக்குரிய சிறப்புக்கள், தாய்மையின் இருப்பிடம், உயர்ந்த ஞான குரு ஆகிய மூன்றுவகை சிறப்பியல்புகளும் ஒருமிக்கமைந்திருந்தன.

1853 ஆம் ஆண்டில் ஜயராம்பாடி எனும் சிற்றூரிலே, பல சிறப்புக்களையுடைய, பக்தி மிகுந்த அந்தணர் குடும்பத்தில் அவதரித்த அன்னையார்—

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நான்கு படைகள் காவல் காக்க கற்பை நிலை நிறுத்தி எல்லையற்ற தாயன்பைப் பொழிந்து பெண் குலத்திற்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

1859 ஆம் ஆண்டு வைகாசி மாதத்தில் சதா தெய்வீக நிலையில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு சாரதா தேவியை மணம் முடித்து வைத்தார்கள்.

> அன்னை சாரதா தேவியின் ஜயந்தி தினம் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகும். அதனையொட்டி பிரசுரமாகும் கட்டுரை இது.

பாணிக்கிரணம் என்று அழைக்கப்படும் இந்நிகழ்ச்சி நடந்து முடிந்ததும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தக்ஷிணேசுவரம் ஏகி தனது தெய்வீக நிலைக்கு ஆதாரமாயுள்ள சாதனைகளில் ஈடுபடலானார்.

சாரதாதேவி தன்னுடைய கிராமத்தில் இருந்து வந்தார். தான் தன்னுடைய கணவனை அடைந்து, அவர் பக்கலிலே இருந்து மனதார சேவை செய்யும் நாளை எதிர்பார்த்த வண்ணமாகவே இருந்தார்.

இதே வேளையில் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு பைத்தியம் பிடித்துவிட்டது என்ற செய்தி அன்னை சாரதாதேவியாருக்கு எட்டியது. இது கேட்டு அன்னையாருக்கு மனதில் சலனமோ, ஏமாற்றமோ தோன்றவில்லை. பதிலாக தாம் அவர் பக்கத்தே இருந்து சேவை செய்யும் வாய்ப்புக் கிடைத்தால் மிக நன்றாக இருக்கும் என்றெண்ணி அந்த இனிய நாளை எதிர் நோக்கியிருந்தார்.

1872 ஆம் ஆண்டு முதன்முதலாக தக்ஷிணேசுவரம் வந்தபொழுது அன்னை 19 வயது நிரம்பியவளாகவும், ஸ்ரீ ராமகிருஷ்ணர் 36 வயதுடையவராகவும் இருந்தார்கள். இக் காலம் தொட்டு ஸ்ரீ ராமகிருஷ்ணர் மறையும் வரையும் இவரின் பக்கத்தே இருந்து அரியபல தொண்டாற்றினார்.

அன்னை ஸ்ரீ ராமகிருஷ்ணருடன் 14 ஆண்டுகள் வாழ்ந்த வாழ்க்கை இந்தியாவின் ஆத்மீக சரித்திரத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளது. இவர்கள் இருவரும் சாதாரண மக்கள் மிகவும் ஈடுபடும் உலகியல் விவகாரங்களில் இருந்து தங்களை விடுவித்து, ஆச்சிரம வாழ்க்கை வாழ்ந்தார்கள்.

உலகத்து வாழ்கின்ற இல்லறத்தார்களுக்கு இது ஓர் எடுத்துக்காட்டு. கணவனும், மனைவியும் கருத்து ஒருமித்து தங்கள் ஆசாபாசங்களையெல்லாம் நிதர்சனமாக நீக்கி, தெய்வீக நிலையை அடைய முயலவேண்டும் என்பதை இருவரும் எங்களுக்கு வாழ்ந்து காட்டியுள்ளார்கள்.

இக்காலத்தில்தான் அன்னை தன்னகத்தே சிறிய குணங்களான அடக்கம், சாந்தம், எதற்

**மு. ஜெயக்குமாரி**

கும் அஞ்சாத தன்மை, திருப்தி, அன்பும் சேவையும் வெளிக்கொணரக் கூடிய சந்தர்ப்பம் வாய்ந்தது.

தன்னை நாடிவந்த ஆயிரக்கணக்கான அடியார்களுக்கு ஆத்மீக செல்வத்தை அள்ளிக் கொடுப்பதற்கு வேண்டிய பயிற்சியையும் பெற்றார்.

அன்னை ஸ்ரீ சாரதா தேவியை ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஜகன் மாதாவாகவே கண்டார். காளி பூஜை நடத்தவேண்டிய இரவொன்றில் ராமகிருஷ்ணர் பூஜா பீடத்தில் தமது இளம் மனைவியையே அமரச் செய்து அவளையே தேவியாக ஆவாஹனம் பண்ணி,

(7ஆம் பக்கம் பார்க்க)

## தனி வழிதான் விடிவைக் காட்டும்!


மாவட்ட மாகாண முடிவைப் பார்த்து
மக்களது விழிகளெல்லாம் பூத்துப் பூத்து
பாவட்டஞ் சருகாகிப் போச்சு...போச்சு...
பல தடவை தோல்வியெனில் என்ன பேச்சு?
காவட்டும் காவடிகள் டில்லி...திம்பு...
கதறட்டும் இங்குள்ளோர் ... புரட்சி அம்பு
தாவட்டும் தமிழ்மண்ணில் ஏய்க்கும் கூட்டம்
தனையொழிப்போம்! தனிவழிதான் விடிவைக் காட்டும்!

மன்னாரில் ஒரே வீட்டில் ஆறுபேர்கள்...
மட்டுநகர் திருமலையில் வளைக்கும் போர்கள்...
எந்நாளும் தமிழர்தலை மண்ணிற் சாயும்
இந்நாளிற் பேச்சென்ன? வெடிகள் ஓயும்
அந்நாளும் வந்திடுமோ ... என்போர் சொத்து
அழியுதடா 'பொம்பரினால்'... அடைவார் பித்து!
எந்நாளும் இதுவொன்றே மிச்சம்...மிச்சம்...
என்றுதான் மாறுமோ இந்த அச்சம்.

பொங்கிவரும் அலைகடலைத் தினமும் பார்த்து
பொருமுகிற மக்களின் நெஞ்சிற் பூத்து(த்)
தொங்குகிற வேதனையின் துயரைக் கோத்து
தொடுத்திடலாம் "துயர்மாலை" விடிவைக் காத்து
இங்குதினம் ஒலிக்கின்ற கண்ணீர்ப் பாட்டு
உடைத்திடுமா ஆள்பவரின் இதயப் பூட்டை?
செங்குருதி வெண்மணலைச் செழுமை யூட்டும்...
சிந்தையிலே தமிழ்நெருப்பின் அனலை மூட்டும்!

*

மு. வே. யோ. வாஞ்சிநாதன்



# தமிழரே ஆதிகள்:
## மகாவம்சமே ஆதாரம்

எமது முன்னோர்களுக்கு சரித்திர அறிவு இருந்ததோ, என்னவோ எமக்கென எந்தவித சரித்திரத்தையும் எழுதிவைத்துச் செல்லாததால் நாம் இன்று திண்டாடிக்கொண்டு இருக்கின்றோம்

ஆனால் இடையே வந்த சிங்களவரோ தமக்கு ஏற்றாற்போல் சரித்திரத்தை எழுதிவைத்துக் கொண்டு தாம் தான் இந்நாட்டின் முதற் குடிகள் என்றும் நாம் படை எடுத்து வந்து குடியேறியவர்கள் என்றும் கூறி துவேசத்தை வளர்த்து பரம்பரை பரம்பரையாக எம்மை அழித்துக்கொண்டே வருகிறார்கள்.

ஏறத்தாள 2,500 ஆண்டுகளுக்கு முன் விஜயனும் அவனது தோழர்களும் வந்ததாகவும் அவர்கள் வந்த காலத்தில் இங்கு வேடர் மாத்திரமே இருந்தார்கள் என்பது போலவும் காட்ட முனைகிறார்கள் விஜயன் குவேனியை மணந்தபின் வேடர்களின் ஒரு கலியாண வீட்டில் வைத்து குவேனியின் உறவினரான வேடர்கள் அனைவரையும் கொன்றுவிட்டதாக மகாவம்சம் கூறுகிறது. வேடர்கள் எல்லோரும் அழிக்கப்பட்டதனால் வேடர்களிடம் இருந்த இலங்கையானது, தமது கைக்கு மாறிவிட்டதாக அதன் மூலம் தெரிவிக்கிறது.

இலங்கையும் அவர்கள் கொண்டு வந்த பெயரே. உண்மையான இலங்கையானது ஆந்திர மாநிலத்திற்கு வடக்கேயே இருந்தது என்று தற்போதைய இந்திய சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். நாம் படித்த சரித்திரப் புத்தகங்கள் எல்லாமே மகாவம்சத்தை ஆதாரமாக வைத்தே எழுதப்பட்டவை.

ஆகவே அச்சரித்திரத்தில் திரித்து எழுதுவதில் அவர்கள் விட்ட தவறுகளை கண்டு பிடிப்பதன் மூலமே அவர்கள் சரித்திரத்திற்கு முற்பட்டவர் தாம்

**என். ஜெயக்குமார்**
**மானிப்பாய்**

என்பதைக் கண்டு கொள்ளலாம். விஜயன் இறந்தபின் அவனுக்கு வம்சம் இல்லாது போகவே அவனது அண்ணன் மகனான பாண்டுராஜன் என்பானை வங்காளத்திலிருந்து கூட்டி வந்து முடி சூட்டினார்கள்.

பாண்டுராஜன் ஆண்டுவரும் வேளையில் ஒரு நாள் பெரும் படையுடன் வடக்கே வந்திருந்தான். அந்நேரத்தில் பாழடைந்திருந்த தம்பலகாமம் சிவன் கோவிலை புதுப்பிப்பதற்காக சிற்பக்கலைஞர்களுடனும், படையினருடனும் சோழ இளவரசன் தமிழ்நாட்டிலிருந்து வந்திருந்தான். அதனை அறிந்த பாண்டுராஜனின் மனைவி எஞ்சியிருந்தபடையை அவர்களை அழிப்பதற்காக அனுப்புகிறாள்.

அங்கு சென்று தமிழர்களின் படைபலத்தைக் கண்ட ராணி அனுப்பிய படை தமிழ்ப்படையுடன் மோதும் எண்ணத்தைக் கைவிட்டு திரும்பி விடுகிறது.

பாண்டுராஜன் வடக்கே கபாருக்கெதிராக படை எடுத்துச் சென்றான்? அவன் மோதுவதற்காக அல்லது அழிப்பதற்காக வடக்கே சென்றான் என்றால் அப்போது வடக்கே யாரோ சிங்களவர் அல்லாதவர் வாழ்ந்து கொண்டு இருந்தார்கள் என்பது நிரூபணமாகிறது. விஜயனுக்கு அடுத்ததாக ஆண்டவனே பாண்டுராஜன் அவனது காலத்தை விஜயன் வருகையின்பின் ஐம்பது ஆண்டுகள் என எடுத்தோமாயின், அக்காலத்திலேயே ஒரு பாழடைந்த இந்துக் கோவில் தம்பலகாமத்தில் இருந்ததாயின் அக்கோயில் பாழடைவதற்கு எத்தனை நூற்றாண்டுகள் சென்றிருக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### மகாத்மா கூறும் சேவை

சேவை என்பதன் பொருள் யாது. புத்த காலத்தில் உடன் பிறந்த மனிதர்களைக் கொல்வதும் சேவைதானா? இல்லை எது செய்தாலும் தாய்மையாகவும் பெருந்தன்மை உடையனவாகவும் இருக்கும் செயல்களைச் செய்வதே சேவையாகும்.

ஏழைகளுக்குச் சேவை செய்வதற்குள்ள திறமை எம்மிடமிருப்பதாக நாம் நினைத்தால் அதைப்பரிபூரணமாக உபயோகப்படுத்தக் கடமைப்பட்டவனாவேன் அப்படிச்செய்யாவிட்டால் என்னை முட்டாளென்றே சொல்ல வேண்டும்.

சேவை செய்ப தன்னுடைய வாழ்வை அர்ப்பணம் செய்தவன் ஒரு நிமிட நேரம் கூடச் சோம்பியிருக்க முடியாது ஆனால் நற்செயல் எது, தீயசெயல் எது என்று அறிந்து கொள்ளவேண்டியது அவசியமாகும்.

# பாட்டுக்குப் பாட்டெடுத்து பாடுவதைக் கேளாயோ

'ஒரு ராகம் பாடலோடு காதில் கேட்டதோ மனதோடு ஊஞ்சலாடுதோ? தினம் உறங்காமலே... ஓ தென்றலே ஓடோடிவா...'

இப்படி ஒரு பாட்டு, இன்னும் எத்தனையோ பாட்டுக்கள் நாளாந்தம் அங்கும் இங்குமாகக் கேட்கின்றோம்.

இவற்றையெல்லாம் தொடர்புபடுத்திப் பார்ப்போமானால் கனியோ பாகோ கற்கண்டோ காதில் பாயும் மதுரமொழி என்றே சொல்லத் தோன்றும்.

கவிஞர்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் புனைந்த கவிதைகளிலெல்லாம் அழகின் சிரிப்பை நாம் கண்டு அனுபவிக்கலாம்.

இந்தக் கவிஞர்களின் கற்பனையில் ஆயிரம் மலர்கள் மலர்ந்து பூத்துக் குலுங்கும், சோலையில் மாமயில் ஆனந்த நடனம் ஆடும், பூங்குயில் சங்கீதம் பாடும், வண்டு அற்புதக்கூத்துத்தான்.

கவிஞன் கண்டாலே கவிதை!

'இதற்குமேல் என்னால் எதுவும் சொல்ல இயலாது. என்னிடமிருந்து கவிதை பிறந்து விட்டது. அதை நீங்கள் எப்படிப் புரிந்து கொண்டாலும் சரி, அது பாருக்காக, படைப்புருவம் எடுக்கும் நிலையில் பலவகை நயங்கள் வெளியாகும் வாழ்வின் அனுபவங்கள் கவிதையாடைதரிக்கும் போது அந்த ஆடையில் எத்தனையோ வேலைப்பாடுகள்' என்கிறார் டாக்டர் மின்னூர் ஸ்ரீநிவாசன்.

### பாடல்கள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்

அதன் பொருள் என்ன என்றெல்லாம் பொழிப்புரை சொல்லிக் கொண்

கவிஞர்கள் செய்யும் வேலைப்பாடுகளை இனிப் பார்ப்போமா?

'நேரமிது, நேரமிது நெஞ்சில் ஒரு பாட்டெழுத, இன்பம் இன்பம் என்றெழுத, நீ எழுத நான் எழுத பிறந்தது பேரெழுத'

கவிதை கவிஞனிடம் இப்படித்தான் பிறக்கின்றதோ?

காற்றினிலே
வரும் கீதம்

'காற்றினிலே வரும் கீதம், கண்கள் பனித்திட பொங்கும் கீதம் நில்லாமல் அந்த இரவினில் தென்றல் உலாவிடும் வழியில் நீல நிறத்துப் பாலகன் ஒருவன் குழல் ஊதி நின்றான்.'

காலமெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கலாம் இந்தக் கவிதையை. கவிதை கல்கியினுடையது காதில் தேன்பாயச் செய்து கொண்டிருப்பவர் எம் எஸ் சுப்புலக்ஷ்மி.

'கண்டேனே ஆனந்தம், அதிசயம் காற்றினிலே வரும் கீதம்' இப்படி இன்னொரு கவிஞர் பாடுகிறார். ஜானகி குரல் கொடுக்கிறார்.

காற்றினிலே வரும் கீதம், கண்ணனவன் குழல் நாதம் நேற்றிரவு கேட்டேனே' இந்தக் கவிதையை வாணி ஜெயராம் மூலம் கேட்கின்றோம்.

'[illegible] வருவான், [illegible] நற்கீதம் படிப்பான்' பாரதியின் அமுதமயமான பாடல் இன்றும் கேட்டுக் கொண்டே இருக்கிறது அவனது கவிதையிலிருந்து இன்று பலவித கவிதைகள் பிறப்பதையும் பார்க்கிறோம்.

காலை மாலை

'வெள்ளிக்கிழமை விடியும் வேளை வாசலில் கோலமிட்டேன்' என ஆரம்பிக்கும் கவிஞனது மனக்கோலங்கள் எத்தனையோ அழகுக் கோலங்களைப் போடும்.

'நித்திரை தான் போதாதோ, நித்திலமே கேளாயோ, இத்தரையில் உன் பணிகள் எத்தனையோ எழுவாய் நீ' எனத்தட்டி எழுப்புவான் ஒரு கவிஞன்.

'காலை நேரப் பூங்குயில் [illegible] கேட்கு

வா ... கோலங்கள் அடுவரை ... தோ, கலந்து போகும் மேகங்கள் கவனமாகக் கேட்குதோ?' என்று கேட்பான் இன்னொரு கவிஞன்.

இப்படிக் கோலமிட்டு காலை பொழுதை வரவேற்கும் கவிஞன் மாலைப் பொழுதின் மயக்கத்தில் எத்தனையோ கனவு காண்கின்றான்.

'மாலைப் பொழுதின் மயக்கத்திலே நான் கனவு கண்டேன்' என்பான்.

இந்தப் பொன்மாலைப் பொழுதில் அவன் காணும் காட்சிகள் எத்தனை எத்தனையோ!

'மாலை மயங்குகின்ற வேளை பச்சை மயில்கள் உலவுகின்ற சோலை'

'மஞ்சள் வெயில் மாலையிலே வண்ணப் பூங்காவிலே பஞ்சவர்ணக் கிளிகள் கொஞ்சும் பரவசம் பார்!'

'சோலை அழகினில் மாலை வசந்தமே துள்ளி விளையாடுதே'

### பாட்டுப் பாடவா! பார்த்துப் பேசவா!!

மலர்கள்

இப்படி மனோரம்யமான மாலைக்காட்சிகளை வர்ணிக்கும் கவிஞர்கள் மலர்களை விட்டு வைப்பார்களா? அவற்றையும் பார்ப்போம்.

'ஆயிரம் மலர்களே மலருங்கள், அமுத கீதம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

**க. கணேசலிங்கம்**

## ஞான சஞ்சீவி
### -ஜீவாத்மா-

நெருப்பில் இருந்து சிதறிய தீப்பொறிகள் போல ஜீவாத்மாக்கள் எல்லாம் பரமாத்மாவில் இருந்து வெளிப்படுபவையே.

மனிதனுடைய நிஜசொரூபம் ஆத்மன் சரீரத்தின் மூலம் ஆத்மாவானது தன்னை வெளிப்படுத்தும் பொழுது அது ஜீவாத்மா என்று அழைக்கப்படுகிறது.

ஆத்மன் பரமாத்மனில் இருந்து வேறுபட்டதல்ல சமுத்திரத்தின் அலைகள் எவ்வாறு சமுத்திரத்திலிருந்து வேறுபடாதவையோ அதேபோன்று ஆத்மாவும் பரமாத்மாவின் அம்சமே. அலைகளுக்குத் தனித்துவம் இல்லாதது போல ஆத்மனுக்குப் பரமாத்மனை விட்டு நீங்கிய தனித்துவம் இல்லை.

ஆத்மனுக்குப் பிறப்பும் இல்லை. இறப்பும் இல்லை. அதற்கு உருவமும் இல்லை. தோற்றமும் இல்லை கால, இட, காரண காரியங்களுக்கு அது அப்பாற்பட்டது.

பரமாத்மனின் பரிசுத்த உணர்வு நிலையை 'சித்தாகாசம்' எனப்படுகிறது ஆத்மனும் அதே நிலையில் உள்ளதே. ஆத்மனும் ஆகாசத்தைப்போன்று மாற்றங்களுக்கு உட்படாதது. அகண்டாகாரமாயுள்ளது ஆனால் இரண்டுக்குமிடையே ஒரேயொரு வேற்றுமை உண்டு. ஆகாசம் உணரும் திறமற்றது (Insentient) ஆத்மன் உணரும் தன்மை (Sentient) யுள்ளது.

ஏகமாய், அகண்டமாய், நீக்கமற, எங்கும் வியாபித்திருக்கும் மெய்ப்பொருளின் அம்சமாகிய ஆத்மன் உபாதிகளால் (Limiting Adjuncts) கட்டுண்டு இடக்கையில் ஜீவாத்மா எனப்

-குமரகுரு-

படுகிறது.

ஜீவாத்மாவின் சுயமான இயல்பு சத்-சித்-ஆனந்தம். ஆனால் அந்நிலை உபாதிகளால் மறைக்கப்படுகிறது. பிரகிருதியின் தொடர்பினால் ஏற்படுபவை உபாதிகள்.

ஜீவாத்மா கால, இட, காரண காரிய இயல்புகளுக்கு கட்டுண்டு கிடப்பது அது மாயை என்னும் அடிமைத்தளையில் சிக்குண்டு இருப்பது.

ஆன்மாவை உடலும் உள்ளமும் ஆகிய பிர

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அத்தியாயம் ஆறு

## தேவனின் மோகம்

இந்தத் தேவன் வேறு யாருமல்ல. எங்கள் மாமாவின் மகன். எங்கள் முறை மச்சான் தான். அம்மாவுக்கோ இவனைக் கண்டால் பிடிக்காது. மாமி சின்னவயதில் இறந்துவிட்டபடியால் தாய்ப்பாசம் என்னவென்று அறியாமல் வளர்ந்த இவனுக்குத் தகப்பனின் கவனிப்பும் பரிவும் கூடக் கிட்டவில்லை. மாமாவின் போக்கு ஒரு தனிரகம். யாரோடும் ஒட்டிப் பழகமாட்டார். இதனுல் இவன் சின்னவயதிலேயே கெட்ட சிநேகிதர்களோடு கூடிக் குறிக்கோளற்ற வாழ்வு வாழத் தொடங்கிவிட்டதோடல்லாமல் படிப்பைக்கூடத் தொடராமல் இடைநடுவில் விட்டு விட்டான்.

ஆண்டுகள் மறைந்து வயது கூடக்கூட, இவனது கெட்ட பழக்கங்களும், நட்டாமுட்டிச் செய்கைகளும், சண்டித்தனமும் கூடி வந்தன.

துணிந்து இவனைக் கண்டிக்கிற தைரியம் இந்த ஊர்ப்பெரிய மனிதர்களுக்கும் சரி, உறவுக்காரர்களுக்கும் சரி இருந்ததில்லை. ஏனென்றால் இவன் எவருக்குமே பயப்படாதவன். எதற்கும் துணிந்தவன். யாராவதொருவர் துணிந்து இவனது செய்கைகளைக் கண்டித்து விட்டால் அன்றே அவர்களது வீட்டில் புகுந்து சண்டித்தனம் செய்வான்.

ஆனால் இவனுக்குச் சின்ன வயதிலிருந்தே என்மீது ஒரு மதிப்பு. நான் சொல்லுகிற எதையுமே இவன் தட்டி நடந்ததில்லை. இவனது கெட்ட பழக்கவழக்கங்களைக் கைவிடுமாறு எத்தனையோ தடவைகள் இவனைக் கண்டித்திருக்கின்றேன். அப்போதெல்லாம் மௌனம் சாதிப்பானேயொழிய வாய் திறந்து எதுவுமே பேசியதில்லை. மறுநாளே அவனது நட்டாமுட்டித் தனங்களைப்பற்றிக் கேள்விப்படும் போதெல்லாம் மனதுக்குள் வருந்துவேன்.

இவன் என்னதான் ஊராருக்குக் கெட்டவனை போதிலும் இவனை என்னால் வெறுக்க முடியவில்லை. தாயை இழந்து சின்னக் குழந்தையாயிருந்த போதே இவனை எங்களோடு வைத்து வளர்த்தவள் நான். தம்பியில்லாத குறையை இவன் மூலம் நிவர்த்தி செய்து கொள்வதாக ஒரு பிரமையில் பழகியதாலோ என்னமோ எனக்குத் தெரியவில்லை. இதற்குத்தான் பாச உணர்வு என்று பெயரோ?

விடை காண முடியவில்லை.

இந்தத் தேவன் இப்போ கொஞ்ச நாட்களாக இந்த வீட்டிற்கு அடிக்கடி வந்து போகிறுன். நான் இங்கு வருவதற்கு முன்பிருந்தே, அதாவது கடந்த ஏழெட்டு மாதங்களாக இங்கு அடிக்கடி, எந்தக் காரணமுமில்லாமல் வந்து போவதாக அம்மா சொன்னுர்.

இதில் ஏதோ காரணமிருக்க வேண்டுமென்று அம்மா சந்தேகப்பட்டார். அந்தக் காரணம் என்னவாயிருக்கும் என்று எனக்கு இலேசாகப் புரிந்தது. இந்தத் தேவன் அன்றைக்குப் போல இன்றைக்கும் ஒரு சிறுவனல்ல. இன்றைக்கு இவன் ஒரு இளைஞன்.

இயற்கையாக இளைஞர்களின் உள்ளத்தில் எழுகின்ற உணர்வு அலைகள் இவனை மட்டும் பாதிக்காதா? என்னதான் காவாலியாக இருந்தாலும் இவனும் உணர்ச்சிகளுள்ள இளைஞன்தானே? இரண்டும் இரண்டும் நான்கு என்று கூட்டிப் பார்க்க வேண்டுமா?

தங்கச்சி லலிதா பருவத்தின் வாயிலில் நிற்பவளும் ஒரு குமர்ப்பெண்; அழகி; அத்தோடு இயற்கையின் திருவிளையாடல் அவளது தோற்றத்தில் இப்போது கவர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

அதிலும் இவனுக்கு முறை மச்சாள்; இவைகளெல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பிரித்துப் பார்க்கும்போது தேவன் இங்கு அடிக்கடி சுற்றிச் சுற்றி வருவதன் காரணம் புரியாமலா போகும்?

தித்திப்பு உள்ள இடத்தைச் சுற்றித்தானே ஈக்கள் மொய்க்கும்.

இதையெல்லாம் நினைத்துப் பார்க்கும்போது எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது. இதற்கு என்ன முடிவு ஏற்படப் போகிறது? இப்போதைய நிலையில் அம்மாவும் அப்பாவும் இந்தத் தேவனைத் தங்கச்சியுடன் இணைத்துப் பார்க்க நினைப்பார்களா?

அப்பாவும் அம்மாவும் மட்டுமல்ல, ஏன் என்னுலேயே அப்படி ஒரு நிலைமையைக் கற்பனை கூடச் செய்து பார்க்க முடியவில்லையே! இந்த நிலையில் தங்கச்சி லலிதாவோ யாரோ ஒருத்தனின் பேச்சை நம்பி அவனிடம் மனதைப் பறிகொடுத்து நிற்கிறுளே!

தேவனே முரடன்! இதுநாள் வரை நினைத்ததைச் சாதித்துப் பழக்கப்பட்டவன்; இவனை அலட்சியப்படுத்திச் சரிக்கட்டி விடலாம் என்பதை என் மனது ஏற்க மறுக்கிறது. சாமர்த்தியமாக, புத்திசாலித்தனமாக இதற்கு ஒரு சுமுகமான முடிவு காண வேண்டுமானுல் இந்த முரடனை அன்பால் தான் சமாளிக்கலாம் என்ற உணர்வு தலைதூக்க அவனுடன் பேச்சுக் கொடுக்கிறேன்.

'மாமாவின் பாடு இப்போது எப்படித் தேவன்!'

'அப்பாவுக்கென்ன? தானும் தன் பாடும்; நான் அவரைக் கொஞ்ச நாட்களாய் காணவில்லை' அவன் பேச்சில் விரக்தி தொனிக்கிறது.

'என்ன தேவன் மாமி இல்லாமல் உன்னைத் தனியாய் வளர்த்தெடுத்தவர் மாமா! அவரை நீ உதாசீனப்படுத்துகிறுய் போலத் தெரியுதே!' வார்த்தையில் கனிவை வரவழைத்துக் கொண்டு வினவுகிறேன்.

'என்ன மச்சான், மற்றவர்களைப் போலத்தான் நீங்களும் நினைக்கிறியள். அப்பாவுக்கு இப்ப என்ன குறை இருக்கிற வயல் புலத்தைப் பார்த்துக் கொண்டு சந்தோஷமாகத்தானே இருக்கிறார்'

'என்னதான் காசு பணம் இருந்தாலும் நீ இப்படி ஊரிலை கெட்ட பெயர் கேட்டுக்கொண்டு திரிந்தால் அவருடைய மனம் புண்படாதோ?' என்கிறேன் நான்.

'மச்சான், நான் வேண்டுமென்று இப்படிச் செய்கிறேன்? சின்ன வயதிலிருந்தே இப்படி வாழ்ந்து பழகி!... எனக்கு என்னை எவராவது உதாசீனப்படுத்தினுலோ, ஏசினுலோ அதை என்னுல் பொறுத்துக் கொள்ள முடியாது' ஏதோ ஆவேசப்பட்டவன் போலக் கூறுகிறுன்.

நான் மௌனம் சாதிக்கிறேன். எனக்குத் தேவனின் மனது புரிகிறது. சின்ன வயதிலிருந்தே அன்புக்கும் ஆதரவுக்கும் ஏங்கித் தவித்து, அது கிடைக்காத விரக்தியில் இப்படி ஒரு மனநிலை ஏற்பட்டிருக்கிறது இவனுக்கு.

இவனை இப்படி ஒரு பயங்கரமானவனுய் மாற்றியது இந்தச் சமூகமே. அந்தச் சின்ன வயதில் ஏற்பட்ட ஏக்கம், நிராசையாகி விரக்தி தோன்றியபோது. கெட்ட நண்பர்களின் சிநேகிதம் இவனைத் திசை திருப்பி விட்டிருக்கிறது.

இருந்தாற்போலிருந்து தேவன் சொன்னுன்,

'மச்சான், எனக்கு உங்களைப் பார்க்கவே பரிதாபமாயிருக்கிறது. ஆனுல் மற்றவர்களைப் போல வாய் வார்த்தைகளில் ஆறுதல் கூறுவதில் என்ன பயன் ஏற்பட்டு விடப் போகிறது.

கடவுள், கடவுள் என்கிறார்களே அப்படிக் கடவுள் என்று ஒருத்தர் இருந்தால், உன் நல்ல மனதுக்கு உனக்கு ஏன் இப்படி ஒரு நிலைமையைத் தரவேணும்?—

தொடர்ந்து பேசியதில் மூச்சு வாங்குகிறது அவனுக்கு.

'மச்சான், எனக்கு இந்த வீட்டிலை உன்னைத் தவிர வேறு ஒருத்தரையும் பிடிக்கவில்லை' என்கிறுன் திடீரென்று.

'ஏன்?' என்கிறேன் முகத்தில் கேள்விக் குறியோடு.

'பின் என்ன? மாமாவும் மாமியும் என்னைக் கண்டால் வேண்டா வெறுப்பாக ஒதுங்கிப் போகிறார்கள்.

லலிதாவோ என்னைக் கண்டால் ஏதோ புலி சிங்கத்தைக் கண்டது மாதிரிப் பயந்து ஒளிக்கிறுள்' ஏதோ ஆவேசப்படுபவனைப்போலப் பேசுகிறுன் தேவன்.

எனக்குப் பேச்சின் போக்குப் புரிகிறது. இவன் சுற்றி வளைத்துப் பேச்சை எங்கு கொண்டு வருகிறுன் என்று புரிகிறது.

அவன் உள்ளத்து எண்ணங்கள் தானே வாய் வழியே வரும் நேரடி

(6 ஆம் பக்கம் பார்க்க)

> எனக்குப் பேச்சின் போக்குப் புரிகிறது. தேவன் சுற்றி வளைத்துப் பேச்சை எங்கு கொண்டு வருகின்றுன் என்பதும் தெரிகிறது... நேரடியாக விஷயத்துக்கு வந்து விட்டால்... என்ன பதில் கூறமுடியும்?

---

# சொந்த மண்ணுக்குக் களங்கம் ஏற்படுத்த புதிய களம் தேடி மந்திரி திருவிளையாடல்

**பறங்கியரின் களிமண் கோட்டை மீது படைகொண்டுமோதிய நல்லூர் அரசு (பகுதி: பதின்மூன்று - அ)**

● ம. க. அ. அந்தனிசில் ●

பருத்த மரங்கள் சூழ பவ்விய தோற்றத்துடன் பாங்காக காட்சியளிக்கிறது மந்திரி மாளிகை!

அதன் சித்திர மாடத்தில் மேலும் கீழுமாக நடைபயின்று கொண்டிருக்கிறன் மந்திரி பரநிருபசிங்கன். அவன் சிந்தையும் தலை கிறுகச் சுழன்று கொண்டிருக்கிறது.

தான் அண்ணனாக இருந்தும் நாட்டின் மன்னனாக முடிசூட முடியாததை நினைத்த வண்ணமாக காலம் கழித்த மந்திரி பரநிருபசிங்கன் சந்தர்ப்பம் கிடைத்தால் தான் மன்னனால் தனக்குப் பின் தன் மகன் பரராஜசிங்கத்துக்கு முடிசூட வேண்டுமென்பதை எண்ணமாகக் கொண்டிருந்தான்.

அதன் நிமித்தம் சங்கிலி மன்னனுக்கு எதிராக எத்தனையோ சின்னத்தனமான குள்ளச் செயல்களை திரை மறைவில் செய்து வந்தான். காக்கை வன்னியனைக் கைக்குள் போட்டு தன் கபடநாடகத்தைமேடையேற்ற காலத்தை எதிர்பார்த்து காவைத்திருந்தான்.

எல்லாமே மண்விழுந்தது போலாயிற்று.

### மந்திரியின் திருவிளையாடல்

பின்னர் பறங்கியரின் சகாயத்தைப் பெற நினைத்து செயலில் இறங்கினுன். பண்ணைத்துறையில் வந்திறங்கிய பறங்கியருக்காக மன்னனின் முன்னிலையில் பரிந்துரை புரிந்தான்.

பறங்கியர் மண்கோட்டை கட்டியதை முன் கூட்டி அறிந்தும் மன்னனிடம் மறைத்தான். செருமுனையில் பறங்கியருடன் போரிடாமல் கைகட்டி நின்றுன்.

சதிரமலை (சந்தரோடை) அதிபதியான

### காக்கை வன்னியனும் பரநிருப சிங்கனும் சதியோசனை

அப்பாவு முதலியையும் தன் கையாளாக்கி பறங்கியருடன் போர் செய்யாமல் தடுத்தான். விங்க தேவன், ஐயாச்சாமி போன்ருேர் மூலம் நல்லூர்சேனைக்குள் பிளவை உண்டுபண்ண எத்தனித்தான்.

நெடுந்தீவிலிருந்தும், தாங்கம்பாடியிலிருந்தும் பறங்கிப்படைகள் வந்து குவிவதை மன்னன் முன் கூட்டியே அறியாதிருக்கும் பொருட்டு ஒற்றர்களை கீழ்த்திசைக்கு அனுப்பிவைத்தான். இச்சமயத்தில், சென்றவிடமெல்லாம் வெற்றி கொண்ட வெள்ளையர் படை மன்னன் செகராஜசேகரனையும் வெற்றி கொள்ளுமெனத் திடமாக நம்பினுன்.

அப்படி வெள்ளையர் வென்றுல் தன்னையும் தனக்குப்பின் தன் மகனையும்....

...இப்போது மந்திரியின் மனக்கண் முன் கோட்டைக் காட்டுபவன் ஏழாம் புவனேகபாகுவின் (கி.பி. 1534-1542) மகன் தர்மபாலனுக்கு பறங்கி மன்னன் நடத்தி வைத்த முடிசூட்டுவிழா நிழலாடுகிறது......

### பொன்முடி நினைவு!

ஏழாம் புவனேகபாகு தன் மகன் தர்மபாலனுக்கு முடிசூட எண்ணியிருந்ததை அறிந்து அவன் தம்பியான மாயாதுன்னை எதிர்த்துக்கிளம்பவே பறங்கியரின் பெரும் உதவியினுல் தன் தம்பியை முறியடித்த புவனேகபாகு தான் உயிருடன் இருக்கும்போதே பறங்கியரின் அனுசரணையுடன் தன் மகனுக்கு முடி சூட்டிவைக்க விரும்பினுன்.

அதையிட்டு கொழும்பிலிருந்த பறங்கித் தளபதியுடன் மந்திராலோசனை செய்த புவனேகபாகு தன் மகனின் சாடையொத்த சிறு பொம்மை ஒன்றை உருவாக்கி, அதற்குப் பொருந்தும் வண்ணம் பொன்னினுல் இழைத்த முடியொன்றையும் செய்வித்தான்.

பின்னர் தன் பிரதானிகளில் ஒருவனுகிய சாலப்பு ஆராய்ச்சி என்பானை அழைத்து பொம்மையை பொன்முடியையும் போர்ச்சுக்கல் நாட்டிற்கு எடுத்துச் சென்று தர்மபாலனுக்கு முடிசூட்டும் பாவனையாக அப்பொம்மைக்கு பறங்கி மன்னனை முடி சூட்டி வைக்கும்படி தான் வேண்டியதாய் சொல்லியனுப்பினுன். சாலப்பு ஆராய்ச்சியின் பயணத்துக்கு பறங்கித் தளபதி கப்பலும் கொடுத்து பிற ஏற்பாடுகளையும் செய்திருந்தான்.

போர்ச்சுக்கல் நாட்டை அடைந்த சாலப்பு ஆராய்ச்சி அதன் தலைநகரான லிஸ்பனுக்குச் சென்று பறங்கி மன்னனை மூன்றும் ஜோன் என்பானைச் சந்தித்து விபரம் சொன்னுன். அதைக் கேட்டுப் பெரிதும் மகிழ்ச்சியும் பெருமையும் கொண்ட பறங்கி மன்னன் குறிப்பிட்ட ஓர் நாளில் (கி.பி. 1541ல்) தனது அரசசபை முன்றலில் பிரதானிகள் மத்தியில், வெகுஜனர் முன்னிலையில், வெடிகள் கோஷிக்க நானுபேத வாத்தியங்கள் முழங்க, சமஸ்தர் ஆரவாரிக்க தர்மபாலனின் பொம்மைக்கு பொன்முடி சூடி, டொன் ஜுவான் தர்மபாலன் எனப்பெயரும் சூட்டி அனுப்பி வைத்தான்.

இது நிகழ்ந்து அடுத்த வருடம் (1542ல்) களனி நதி தீரத்தில் ஏழாம் புவனேகபாகு சவாரி வருகையில் பறங்கியொருவன் கட்ட துப்பாக்கிக் குண்டு தற்செயலாக அவனது தலையில் பாய்ந்ததால் அக்கணமே உயிரைவிட்டான். பின்னர் டொன்ஜுவான் தர்மபாலன் (கி.பி 1542-1581) கோட்டைக்காட்டு மன்னனுக (பறங்கியரின் கைப்பொம்மையாக) ஆட்சி பீடமேறினுன்.

......இவ்வாறு பறங்கியரின் அனுசரணையும், ஆதரவும், ஒத்துழைப்பும் தனக்கும் தன் மகனுக்கும் நிச்சயம் கிடைக்குமென்றுதான் மந்திரி பரநிருபசிங்கன் நம்பிக்கை கொண்டிருந்தான்.

மலை சாய்ந்தது போல் கடைசியில் பறங்கியரும் தோற்றுப்போகவே அதனுல் மலைத்துப்போய் மீளாக் கவலையுற்ற மந்திரி பரநிருபசிங்கன் பெரும் குழப்ப நிலைக்குத் தள்ளப்படுகிறுன்.

சங்கிலி மன்னனை சிம்மாசனத்திலிருந்து அகற்ற இனியும் சந்தர்ப்பம் வராதாவென ஏங்கித் தவிக்கிறுன் அவன்!

அதன் கண் யாழ்ப்பாண இராச்சியத்தின் வெற்றி முழக்கம் ஒருபுறம், முன்னர் சொந்த மண்ணுக்குக் களங்கம் புதிய களம் தேடியலைகிறது

### மந்திரியின் மனம்!

### பறநாகமும் கருநாகமும்

தனது மாளிகையை நோக்கி மிடுக்கான நடைபோட்டு வந்துகொண்டிருக்கும் காக்கை வன்னியனைக் கண்ணுற்ற மந்திரி அவசரமவசரமாகப் படியிறங்கி மண்டபத்துக்கு வருகிறுன், மந்திரியைக் கண்ட காக்கை வன்னியன் அகமகிழ்ந்து புன்சிரிப்பை உதித்த வண்ணம் ''வணக்கம் மந்திரியாரே'' என்று கூறவும் 'வருக வன்னியரே வருக' என்று கூறிய மந்திரி மண்டபத்து இருக்கையில் அமர வன்னியனும் அமர்ந்துகொள்கிறுன்.

'மந்திரியாரின் முகம் நன்ருக வாடிவிட்டது' என்று சொன்ன வன்னியன் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு 'இங்கு யாரும்'...என்று இழுக்க 'வரமாட்டார்கள், வாசல்புறம் காவல் நிற்பவன் நம்ம கையாள்' என்று மந்திரி சொல்லவும் 'சங்கிலி மன்னன் ஆட்சியில் ஜடப்பொருட்களுக்கும் செவிகளுண்டு' என்று சிரித்தவாறு கூறுகிறுன் வன்னியன்.

மந்திரி: உண்மைதான், ஆனுல் சங்கிலியனுக்கு எம்மீது எள்ளளவும் சந்தேகம் கிடையாது.

வன்னி: அதனுல்தான் இதுவரை நம்தலை தப்பியிருக்கிறது......

மந்திரி: (துக்கத்துடன்) ம்......மன்னனுக இருக்கவேண்டிய நான் இப்படியெல்லாம் கேட்கவேண்டியிருக்கிறது.

வன்னி: ஓ...தங்கள் உள்ளம் புண்பட்டுவிட்டதா... மன்னிக்கவேண்டும் மந்திரியாரே...தங்களுக்காகவே நான் நெருப்புடன் விளையாடத் துணிந்தேன்...மன்னனிடம் மண்கோட்டை வீழ்ச்சியுற்றதை நம் மான் மூலம் அறிந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

---

# மொழிபெயர்ப்பில் உசாத்துணையாக நல்ல தமிழை உடனறிவித்தார்

**பண்டிதமணி வரலாறும் காலமும்**

● க. சி. குலரத்தினம் ●

பண்டிதமணி அவர்கள் கல்விப் பணி புரிவதற்குக் கங்கணம் கட்டிய காலத்தில் இலங்கையில் முப்பத்தொரு கல்வி நிர்வாக சபைகள் பிரதேச அமைப்பில் கல்விப்பணி புரிபவர்களுக்குக் கைகொடுப்பதற்கு நாடெங்கும் அமைக்கப் பெற்றிருந்தன.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் நிலவிய கல்வி நிர்வாக சபையில் அரியாலையூர் கௌரவ ஆ. கனகரத்தினம் அவர்கள் தலைவராயும், கௌரவ சு. இராசரத்தினம், திருவாளர்கள் ஏச். எம். பெரேரா, ஜி சுப்பிரமணியம், வை சி சி. குமாரசுவாமி, பி. எச். குரூசெற், ஆர். ஆர். நல்லையா, ஜனுப் ஏ. எம். எம்.அப்துல்காதர் வணக்கத்துக்குரிய பிதா போட் ஆகியோர் அங்கத்தவராயுமிருந்தனர். இவர்களுள் கௌரவ கனகரத்தினம் அவர்களும், இராசரத்தினம் அவர்களும் சட்டசபையின் தெரியப்பெற்ற உறுப்பினராயும் அதிகார பலம் வாய்ந்தவராயுமிருந்தனர்.

### அரியாலை கனகரத்தினம்

அரியாலையூர் தந்த செம்மல் கௌரவ கனகரத்தினம் அவர்களின் உழைப்பினுலும் உபகாரிப்பினுலும் நாவலர் வீதியில் விசாலமான பெருநிலப்பரப்பில் உருவான ஸ்ரான்லிக் கல்லூரி, அக்காலத்துத் தேசாதிபதி ஸ்ரான்லி அவர்களின் கல்வியார்வத்தை நினைவு செய்யும் வகையில் 30-7-1928 ஆம் நாளில் திறக்கப் பெற்றது.

அக்காலத்தில் யாழ்ப்பாண நகரவெல்லையில் 34 தமிழ்ப்பாடசாலைகளும், 10 ஆங்கிலப் பாடசாலைகளும், 3 ஆங்கில தமிழ்ப் பாடசாலைகளும் அரசாங்க உதவி [illegible] வின. அரசாங்கத்தின் [illegible] மொழிப் பாடசாலை இயங்கி வந்தது. இங்கெல்லாம் சராசரியாக 3155 பிள்ளைகள் படித்து வந்தார்கள்.

இவ்வாறுக இலங்கையில் 17 ஆசிரிய கலாசாலைகள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பயிற்சி அளித்து வந்தன. அவை அரசாங்கத்துக்கும், தனியாருக்கும் சொந்தமாயிருந்தன. தனியார் [illegible] பயிற்சிக் கலாசாலைகளின் பெரும் [illegible] கிறிஸ்தவ மிசனரிமார்களுக்கே சொந்தமாயிருந்தன.

இவற்றை 1928 ஆம் ஆண்டில் நோக்கும் போது கொழும்பில் அரசினர் ஆங்கிலப் பயிற்சி, கம்பகாவில் அரசினர் இருமொழிப் பயிற்சி, மட்டக்களப்பு அரசடி வெஸ்லி ஆண்கள், கொழும்புத்துறை கத்தோலிக்க ஆண்கள், யாழ்ப்பாணம் கத்தோலிக்க பெண்கள், கோப்பாய் ஆண்கள், கோப்பாய் பெண்கள், மக்கோனு கத்தோலிக்க ஆண்கள், முசேயிஸ் தனிப்பட்ட பெண்கள், நீர்கொழும்பு கத்தோலிக்கலவன், நித்தம்புவ பௌத்த ஆண்கள், பேராதனை கலவன், புளியந்தீவு கத்தோலிக்க ஆண்கள், இணுவில் இராமநாதன் சைவப் பெண்கள், வாலனு பௌத்த பெண்கள், வென்னப்புவ கத்தோலிக்க பெண்கள் என்பனவும் பிறவுமாம்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுள் நல்லூரில் நிலவிய கல்லூரி சேர்ச் மிசனைச் சேர்ந்ததாய், திரு. குணநாயகம் அவர்களை அதிபராகக் கொண்டிருந்தது.

கொழும்புத்துறையில் கத்தோலிக்க மிசனரிமார் கலாசாலை திருவாளர்கள் சவிரிமுத்து, பிலிப், தோமாஸ், பிரான்சிஸ் முதலானவர்கள் பேராசிரியர்களாயிருந்தார்கள்.

கன்னிபாஸ்திரி மடத்தில் நிலவிய பயிற்சிக் கல்லூரியில் தோமாஸ் என்னும் பெரியார் அதிபராயிருந்தார்.

வேம்படியில் வெஸ்லி மிசனரிமார் நடத்திய பயிற்சிக் கல்லூரியில் சால்ஸ் என்னும் பெரியார் அதிபராயிருந்தார்.

உடுவிலில் நடைபெற்ற அமெரிக்க மிசனரிமார் கல்லூரியில் பெரியார் லேமன் அவர்கள் அதிபராயிருந்தார்.

தெல்லிப்பழையில் நில

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மினிபஸ்களில் பயணம்: நாளாந்தம் நரக வேதனை

தலை நிமிர்ந்து நிற்க இயலாதவாறு (யப்பான்காரன் தன்னுடைய உயரத்திற்கு) தயாரித்த பஸ்தான் இந்த மினிபஸ்கள். அதிலும் ''எல்வ்'' 'ஹையஸ்', 'ரொயாரோ' 'கரவன்' போன்ற அதிலும் சிறிய மைக்ரோ மினிவான்கள் சாமான்கள் ஏற்றுவதற்காக தயாரானவை.

அவற்றில் பிரயாணிகளை, சாக்கில் சாமான் அடைந்தது போல் அடைத்துக் கொண்டு செல்கிறார்கள். சிறிய மைக்ரோ மினிவான்களை குறுகிய தூர சேவைக்கு பயன்படுத்தினால் பரவாயில்லை; பத்துப் பதினைந்து மைல் தூர சேவைகளுக்கும் பாவிக்கிறார்கள். இவ்வாறு மினிபஸ் சேவை பற்றி தமது கருத்தை சொன்னவர் ஒரு பட்டதாரி ஆசிரியர்.

மினிபஸ் சேவை பற்றிய மக்களின் மனக் கோலங்களை சஞ்சீவி வாசகர்கட்காக அறிய முற்பட்டபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது;

மினிபஸ்ஸில் நிற்கவே இடமில்லாமல் படியில் பிரயாணிகள் தூங்கி வழியும் போதும்; வீதியில் கைக்குழந்தையுடன் நிற்கும் தாயைப்பார்த்து ''அக்கா ஏறுங்கோ சீற் தாறேன்'' என்பார் நடத்துனர்.

உள்ளே இருக்கும் எமக்கோ வயிற்றில் புளி கரைத்தது போல் கிலி பிறக்கும்.

தாய்மாருக்கு எழுந்து இடம் கொடுக்க மனம் இடம் கொடுத்தாலும்; எமது உயரத்திற்கு பஸ் இடம் கொடாது. அப்படி எழுந்து நின்றால் முதுகு முள்ளந்தண்டு முறிந்துவிடும். மினிபஸ் கட்டணத்தை உயர்த்தும் அளவுக்கு பஸ் கூரையை உயர்த்தமாட்டார்கள் — என்று அந்த ஆசிரியர் மேலும் சொன்னார்.

**கலைஞர்**

கலைஞர் ஒருவர் இது பற்றி கூறுகையில்; உலக நாடுகளில் கழித்துவிட்ட பஸ்கள் இலங்கைக்கு வரும் அதிலும் கழிவு பஸ்கள்தான் இங்கு ஓட வரும். பஞ்சிகாவத்தையில் கூட இவ்வளவு பழைய பஸ் இருக்காது என்றார்.

**உரிமையாளர்**

மினி பஸ் உரிமையாளர் ஒருவரிடம் கருத்துக் கேட்டபோது அவர் சொன்னார்:

வாகனப் பட்டறைகளுக்கு கொழும்பிலிருந்து காஸ் சிலிண்டர் வராத காரணத்தால் பலவாகனங்களை ஓட்டை ஓடிசலாகவே ஓட வேண்டியுள்ளன.

மேலும் யாழ்ப்பாண வீதிகளில் உள்ள கிடங்கு பள்ளங்களில் எந்தப் புது பஸ் ஓடினாலும் இரு மாதத்தில் பழுதாகி விடுகிறது.

பிரச்சினையான இக் கால கட்டத்தில் எப்ப என்ன நடக்குமோ தெரியாது. முதல் போட பலரும் பயப்படுகிறார்கள். உழைக்கக் கூடிய நேரத்தில் எவ்வளவு உழைக்க முடியுமோ அவ்வளவையும் உழைக்க வேண்டும் என நினைக்கிறோம் — என்றார் அவர்.

பட்டதாரி மாணவன் ஒருவனின் கருத்தைக் கேளுங்கள்:-

தாங்கள் உழைப்பதற்காய் எம்மை உலைக்கிறார்கள். இ. போ. ச. பஸ்ஸில் கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை. அதில் வரும் லாபம் அரசாங்கம் மூலம் மீண்டும் எமக்கே வரும். மினிபஸ்காரர்களோ சேவை நோக்கமின்றி தமது

## மக்களின் மனக் கோலங்கள்

சொந்தலாபத்தை எதிர்பார்க்கிறார்களே! என்றார்.

**பெண் ஊழியர்**

யாழ் கச்சேரியில் பணி புரியும் குடும்பப் பெண் ஒருவர் தமது அனுபவத்தைப் பின்வருமாறு விபரித்தார்:-

மினிபஸ் புறப்பட்டு சிறிது நேரத்தில், சிறிது தூரத்தில் அதனை நிறுத்தி, பயணிகளை பணயக் கைதிகளைப் போல் வைத்திருப்பார்கள் காற்றோட்டமில்லாத பஸ்ஸில் நாம் வேர்த்துப் போயிருப்போம். ஆட்கள் சேரும் வரை காத்திருப்பது ஒன்று, ஆமை வேகத்தில் ஓடுவது அடுத்தது வாயைக் கொடுத்து நடத்துநரிடம் வாங்கிக் கட்டிக் கொள்ள பலரும் பயப்படுவர். நடத்துநர் வாய் திறந்தால் மரியாதைக்கே மரியாதை போய்விடும்.

திடீரென கல்லெறிபட்ட காட்டெருமை போல் பஸ் சிலிர்ப்பிக் கொண்டு பயணிகளை குலுக்கிக் கொண்டு அதி வேகத்தில் செல்லும்.

இறங்க வேண்டிய வயது போனவர்களை தள்ளி விழுத்தாத குறையாக இறக்குவார்கள். சிலவேளைகளில் வைத்தியசாலையில் இறங்க வேண்டிய நோயாளிகளைக் கூட இறக்காது கொண்டு சென்று பஸ் நிலையத்தில் இறக்குவார்கள். கேட்டால் 1 நிமிடம் பிந்தினால் 5 ரூபா தண்டம் செலுத்தவேண்டும் என்பர் - இவ்வாறு அவர் நச்சரித்தார்.

சாட்சாத் மினிபஸ் நடத்துநரிடமே கருத்துக் கேட்டோம். அவர் சொன்னார்:-

பிரயாணிகள் தங்களை வீட்டுக்கு வீடு படலைக்குப் படலை இறக்கிவிட வேண்டும் என விரும்புகிறார்கள். நாம் ஒரு நிமிடம் பிந்திப்போனால் 5 ரூபா சங்கத்திற்குச் செலுத்த வேண்டும்.

பலர் மினிபஸ்ஸிற்குள் சில்லறைக் காசுகளை எடுத்து வைத்துத் தரமாட்டார்கள். இறங்கி நின்று எமது நேரத்தை வீணடிப்பார்கள். இன்னும் சிலர் கிழிந்த ரூபா நோட்டுக்களை நாலாக மடித்து நைசாக தந்துவிட்டு நழுவி விடுவார்கள்– அவரது குறைபாடு.

நடத்துனர் கூறிய கையோடு கிழிந்த காசுபற்றி வங்கி உத்தியோகத்தர் ஒருவரிடம் விசாரித்ததில் அவர் கூறியதாவது:-

ரூபா நோட்டுகள் கிழிந்ததற்குக் காரணம் மினிபஸ் நடத்துனர்களே. சகல தாள்களும் நீளப் பக்கத்தாலேயே கிழிந்துள்ளன. அவர்கள் தான் காசுகளை நீளப்பக்கமாக மடித்து விரல்களுள் செருகி வைத்திருப்பவர்கள்.

பஸ்ஸில் ஏறினால் விழாமல் 'பலன்ஸில்' நிற்க வேண்டும் இறங்கினால் 'பலன்ஸிற்காய்' (மிகுதிக்காசு) நிற்க வேண்டும்.

மேலும் எந்த ஒரு சாரதியும் வாகனம் ஓட்டும் அனுமதிப்பத்திரம் (லைசென்ஸ்) இப்போது எடுப்பதில்லை. போக்குவரத்து விதி விதிகளை எவரும் மதிப்பதும் இல்லை– என்றார் அந்த வங்கி ஊழியர்.

மினிபஸ் சாரதி ஒருவரின் கருத்து வருமாறு:

இப்போது நாம் லைசென்ஸ் எடுப்பது எங்கே? அரசின் சிவில் நிர்வாகம் இல்லாததால் அது பெரும் கேள்விக் குறியே!

ஒழுங்கீனமான சாரதி, நடத்துனர் பற்றிய குற்றச்சாட்டுக்களை மினிபஸ் சங்கங்களிடம் தெரிவித்தால் அவர்கள் அதற்கான நடவடிக்கைகள் எடுப்பார்கள்– என்றார்.

மினிபஸ் சங்கம் பற்றி ஒரு பயணி கருத்துக் கூறுகையில் சொன்னதாவது,

மினிபஸ் சங்கங்கள் பல பிரிவுகளாக வீதிக்கு வீதி இயங்குகின்றன. சில சங்கங்கள் எந்தவித கட்டுப்பாடுமின்றி நினைத்தது போல் கட்டணம் வசூலிக்கின்றன.

கேரதீவு மி. ப. சங்கத்தினர் யாழ்ப்பாணத்திலிருந்து 8 மைல் தூரத்தில் உள்ள நாவற்குழிக்கு 3ரூபா50 சதம் எடுக்கும் அதேவேளையில் சாவகச்சேரி சங்கத்தினர் யாழ்ப்பாணத்திலிருந்து அதே வீதியில் 7 மைல் தூரத்திலுள்ள கைதடிக்கு 4 ரூபா அறவிடுகிறார்கள்.

சங்கங்கள் ஒன்றிணைந்து ஒரு சங்கமாக இயங்காதவரை மினிபஸ் பயணிகளின் பிரச்சினைகள் தீர்க்கப்படமாட்டா –என்றார். ★

பேட்டி: எஸ். ஜே. பி. ரட்ணதுரை

# நாடுகாத்த சிறுவனும் வயல்காத்த சிறுவனும்

இலக்கியம் இனிமையானது. மேற்கென்ன கிழக்கென்ன இலக்கியங்கள் வீரபுருஷர்கள் பற்றியும் வீரத்தாய்மார் பற்றியும், வீரச்சிறுவர்கள் பற்றியுமே அதிகம் கூறுகின்றன இவைகளில் வீரப்பண்புடைய சிறுவர்கள்தாம் மக்கள் மனதில் நீங்கா இடம்பெற்றுவிடுகிறார்கள். இன்றைய சிறுவர்கள்தாம் நாளைய தலைவர்களன்றோ".

ஐரோப்பாக் கண்டத்தில் ஒல்லாந்து சிறிய தேசம். மூர்த்தி சிறிதெனினும் கீர்த்தி பெரிது. அத்தேசத்தின் சில பகுதிகள் கடல்மட்டத்துக்குக் கீழ் உள்ளன அவற்றைக் கடலில் இருந்து காப்பதற்காக கடல் மதில்கள் கட்டியிருப்பார்கள். கடல் மதிலில் ஒரு சிறு விரல் பருமனான துவாரம் வந்தால் போதும். அதுவே விரைவில் பெரிதாகி நாட்டினுள் கடல் புகுந்து விடும். எனவே சிறுவர்களுக்குக்கூட இது பற்றி விழிப்புடன் இருப்பதற்குப் பழக்கப்பட்டிருப்பார்கள்

ஒல்லாந்து நாட்டின் கடற்கரைக் கிராமத்துச் சிறுவன்தான் பீற்றர். அவனது தந்தை மடைகளுக்குப் (SLUICES) பொறுப்பான உத்தியோகத்தில் இருந்தார். இலையுதிர்கால மாலை வேளை. பீற்றர் விளையாடிக்கொண்டிருந்தான். அவனது தாய் அவனை அழைத்து பீற்றரின் குருட்டு நண்பன் ஒருவனுக்குத் தின்பண்டங்கள் கொடுத்துவிட்டு வருமாறு அனுப்பினள் இருட்டுவதற்கு முன்னர் வந்துவிட வேண்டும் என்றும் கூறியிருந்தாள். பீற்றருக்கோ மிக்கமகிழ்ச்சி நண்பனுடன் விளையாட அருமையான சந்தர்ப்பம்.

நண்பனுடன் சிறிது நேரம் விளையாடி விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தான் பீற்றர். இருட்டுவதற்கு முன்னர் வர வேண்டுமென்று அம்மா கூறியிருந்தபடியால் விரைவாக நடந்து கொண்டிருந்தான். வரும்போது கால்வாய்களில் மழையினால் நீர் கரைபுரண்டோடுவதைப் பார்த்தபடியே வந்தான், அவைகள் வேகமாகக் கடல் மதில்மீது அடிப்பதைப் பார்த்தான்.

இடையிடையே சாலையோரம் இருந்த நீல மலர்களைப் பறித்துக் கொண்டு வந்தான். ஓடியாடி விளையாடும் முயல்களைப் பார்த்தான்.

திடீரென நினைவுக்கு வந்தவனைப் போலப் பொழுதைப் பார்த்தான். அது சாய்ந்து கொண்டிருந்தது. இருள் சூழ ஆரம்பித்துவிட்டது. ஆனால் அவனது காதுகளில் சலசல என்று நீர் கொட்டும் சத்தம் எங்கோ கேட்டது. கடல் மதிலை நுணுக்கமாகப் பார்த்தான். அதில் ஒரு துவாரம். அதனூடுதான் கடல்நீர் வந்து கொண்டிருந்தது.

ஆபத்தை உணர்ந்து விட்டான் அவன். இப்படியே விட்டால் பொழுது விடிவதற்குள் நாடே கடலாகிவிடும் சிறிது யோசித்தான்.

ஓட்டையை அடைப்பதற்கு ஏதாவது கல் அகப்படுமா? என்று சுற்றுமுற்றும் பார்த்தான். சிறு கல் கூட இல்லை. 'ஆபத்து ஆபத்து ஓடி வாருங்கள்' என்று உரத்த சத்தமிட்டான் பீற்றர்

எவருமே உதவிக்கு வரவில்லை.

காற்றுப் பலமாக அடித்தது குளிர் அதிகமாகி விட்டது. கைவிரல் விறைத்துப்போய் விட்டது. மீண்டும் ஒருமுறை கத்தினான். பலன் ஏதுமில்லை. கடல் அலை மோதிக்கொண்டிருந்தது கும்மிருள் கவிழ்ந்து விட்டது. வானத்தில் சந்திரனும் நட்சத்திரங்களும் பிரகாசித்துக் கொண்டிருந்தன. மீண்டும் ஏதாவது ஒலி எழுப்பி யாரையாவது உதவிக்கு அழைக்க முயற்சித்தான்

(6 ஆம் பக்கம் பார்க்க)

**காவிய நினைவுகள் கிழக்கும் மேற்கும்**

உதங்கா

# குட்டிப் பூனை செய்த ஒரு குட்டித் தந்திரம்

ஒரு காட்டில் இருந்து அகோரப் பசியுடன் ஊருக்குள் நுழைந்த ஒரு ஓநாய்க்கு ஒரு சின்னஞ்சிறிய பூனைக் குட்டிதான் கிடைத்தது. ஓநாய்க்கு பெரிய சந்தோஷம். தன் வயிற்றுப் பசிக்கு பூனை ஒன்று கிடைத்து விட்டதை எண்ணி,

ஆனால் ஓநாயின் பார்வையிலேயே பூனைக்குட்டிக்குப் புரிந்துவிட்டது. ஓநாய் அருகே சென்ற பூனைக்குட்டி ''ஓநாய் மாமா; ஓநாய்மாமா, நான் உன் கால்வயிற்றுக்குக்கூட காணமாட்டேன், அதோ! அங்கே தெரியுதே அந்த வீட்டில் பாலாடைக்கட்டியை எங்கே வைத்திருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அது பெரியதாய் இருக்கும். ரொம்ப, ரொம்ப ருசியாகவும் இருக்கும். வா! காட்டுகிறேன்'' என்று கூறி ஓநாயை அழைத்துக்கொண்டு கொல்லைப்புறத்தில் இருந்த கிணற்றின் அருகே சென்றது.

அங்கே ஓர் உருளை வழியாகக் கயிற்றைச் செலுத்தி கயிற்றின் இரு முனைகளிலும் இரண்டு வாளிகளைக்கட்டி இருந்தார்கள். ஒரு வாளி மேலே இருந்தது. மற்றொருவாளி கிணற்றுக்குள் இருந்தது.

பூனை கிணற்று நீரில் தெரிந்த நிலாவின் உருவத்தைக் காட்டி ''அதோ பார் பாலாடைக்கட்டி'' என்றது.

ஓநாய் ஆவலாக, ''எப்படி அதை எடுப்பது'' என்று கேட்டது.

''இதோ! இந்த வாளியில் நான் ஏறிக் கீழே போய் எடுத்து வருகிறேன்''என்று கூறி பூனைக் குட்டி மேலேயிருந்த வாளியில் ஏறி உட்கார்ந்தது வாளி மெல்ல, மெல்ல கீழே சென்றது. அது கீழே போகப், போகக் கீழே மற்றொரு முனையில் இருந்த வாளி மேலே வந்தது. கீழே சென்ற பூனைக்குட்டி தண்ணீருக்குள் இறங்காமல் கயிற்றிலே தொங்கிக்கொண்டு பத்திரமாக இருந்தது.

''அடடே! பாலாடைக் கட்டி மிகவும் பாரமாக இருக்கிறதே! ஓநாய் மாமா. நீயும் இங்கே வந்தாயானால் இலகுவாக எடுத்து வந்து விடலாம். அதோ மேலே யிருக்கும் வாளியில் ஏறிக் கீழேவா'' என்று கூறியது பூனைக்குட்டி.

அடுத்த கணமே ஓநாய் ஒரே தாவாகத்தாவி வாளியில் ஏறி இருந்தது. உடனே அந்தவாளி கிடு, கிடுவென கீழ் நோக்கி வேகமாகச் சென்றது. அதே நேரம் பாரம் குறைவாயிருந்ததால் பூனை இருந்த வாளி மேல் நோக்கி வந்தது.

ஓநாய் கீழே போன வேகத்தில் தொப்பென்று நீருக்குள் விழுந்தது. விழுந்த ஓநாய் பிறகு எழுந்து வரவேயில்லை. பூனைக்குட்டி சந்தோசமாக ஓடித் தப்பியது. ★

கே. தமிழ்ச்செல்வன்

## விடுகதை விடுவோம்

1. எழுதுவதற்கு உதவும் பேனு அல்ல- படிப்பதற்கு உதவும் புத்தகம் அல்ல அது என்ன?
2. தாய் இனிப்பாள், மகள் புளிப்பாள், அவள் பெற்ற பிள்ளை வாசமாயிருப்பாள். அது என்ன?
3. முதுகிலே மூட்டை சுமந்து மூன்று மணிக்கு முழப் போவான். அவன் யார்?

**விடைகள்**

1. கரும்பலகை
2. பால், மோர், நெய்
3. நத்தை

-இ. நிர்மலன்

## அன்பு நிறைந்த அப்பா!

அப்பா நல்ல அப்பா
அன்பு நிறைந்த அப்பா
பண்பில் சிறந்த அப்பா
பாசமுள்ள அப்பா
குறையைத் தீர்க்கும் அப்பா
குணத்தில் சிறந்த அப்பா
உண்மை பேசும் அப்பா
உலகில் சிறந்த அப்பா

- செ. புவிராஜ்




# நடவுங்கள், நடவுங்கள்;
## வெறுங்காலோடு நடவுங்கள்!

காலில் செருப்பு அணியாமல் வெறும் காலோடு நடப்பது உடம்பிற்கு ஆரோக்கியமானது என்று மருத்துவ உலகம் கருதுகிறது.

இதனால் உடம்பின் எதிர்புச் சக்தி கூடுகின்றது என அது கூறுகின்றது

எமது உடலின் மேற்பரப்பின் தோல் முழுவதிலும் நரம்பு முனைகள் உள்ளன. அவற்றிற்கு தேமோசெப்டர்கள் என்று பெயர். அவை குளிர், வெப்பம் போன்ற சமிக்ஞைகளை உணர்ந்து கொள்கின்றன.

இத்தகைய நரம்பு முனைகள் நம் பாதங்களின் அடியிலும், சுவாசக் குழாயின் மேற்பகுதியிலுள்ள சளிச்சவ்விலும் அதிகம் உள்ளன

செருப்பு, சப்பாத்துக்கள் அணிவதால் எமது பாதங்கள் தம்மைச்சுற்றியுள்ள பகுதிகளுக்கு ஒரு பழகிப்போன சூழ்நிலையை உருவாக்குகின்றன எமது பாதங்கள் மூடப்படாதிருந்து, அவற்றை குளிர் தாக்கினால் நமக்குச் சளி பிடித்து விடுகிறது.

பாதத்தின் தோலுக்கும் சளிச்சவ்வுக்கும் இடையே நெருங்கிய தொடர்புண்டு. குளிர் பாதத்தைத் தாக்கும் போது சளிச்சவ்வின் வெப்பநிலை வீழ்ச்சியடைகின்றது. இதனை எதிர்த்து நிற்கும் எதிர்ப்புச் சக்தியை உடம்பில் வலுப்படுத்திக் கொள்ளாதவர்கள் மிகவும் எளிதில் சளி, இருமல், தொண்டைக் கரகரப்பு முதலியவற்றால் பாதிக்கப்படுகிறார்கள்.

எனவே வெறுங்காலோடு குளிரில் நடந்து பழகி விட்டால் உடம்பின் எதிர்ப்புச்சக்தி கூடுகின்றது.

கதகதப்பான மணல், மென்மையான புல்வெளி, விதிப்புழுதி என்பன பாதத்திற்கு இதமளிக்கின்றன. கொதிக்கும் மணல், குளிர் மிகுந்த தார்வீதிகள், கூரிய கற்கள், குத்துப்புல் என்பன பாதநரம்புகளை கிளர்ச்சியுறச் செய்கின்றன.

பண்டைய கிரேக்க நாட்டைச் சேர்ந்த ஸ்பார்ட்டர்" எனும் வீரர்கள் எந்த உடல் சிரமத்தையும் தாங்கும் வல்லமை படைத்தவர்கள். இக்குல சிறுவர்களுக்கு 18 வயது வரையில் காலில் செருப்பு அணிய உரிமையிருக்கவில்லை. அந்தக் குலத்தைச் சேர்ந்தவர்கள் உடம்பை இரும்புமாதிரி வைத்திருந்ததன் இரகசியம் இதுவேயாகும்

வெறுங்காலுடன் நடப்பது சரியல்ல, நாகரிகமல்ல என்று நம்மிற் சிலர் கருதுகிறோம். அது தப்பு என்பது புரிகிறதல்லவா? ★

# கணக்கிடுகிறது ஒரு மணிச்சட்டம்!

ஆங்கிலத்தில் AB--ACUS, என்பது தமிழில் 'கணக்கிடும் மணிச்சட்டம்' என்று அழைப்பர்

பண்டைக்காலத்தில் கூட்ட, கழிக்க, பெருக்க, பிரிக்கப் பயன்படுத்தப் பட்டு வந்த ஒரு வித கல்குலேட்டர் இது.

கிறிஸ்துவுக்கு முன்னர் சீனாவில் இது கண்டு பிடிக்கப்பட்டது.

இன்றும் கிழைத்தேய நாடுகளில் நர்ஸரி வகுப்புக்களில் குழந்தைகளுக்கு கணக்குச் சொல்லிக் கொடுக்க இது பயன்படுத்தப்படுகிறது.

1946 ஆம் ஆண்டில் இந்த 'கணக்கிடும் மணிச்சட்டத்தை' இயக்குபவருக்கும் எலக்ரோனிக் கல்குலேட்டரை இயக்குபவருக்கும் இடையே வேகப்போட்டி ஒன்று நடத்தப்பட்டது.

இதில் கணக்கிடும் மணிச் சட்டத்தை இயக்குபவர் வெற்றி பெற்றார்.

கூட்டல், கழித்தல், பிரித்தல் ... abacus வென்றது. ... மட்டுமே தோற்றது. ★

## பஞ்சாமிர்தம் பலரசஅமிர்தம்

### தண்ணீர் விநியோகத் திட்டம் எங்கே ஆரம்பம்?

குழாய் மூலம் தண்ணீர் விநியோகம் செய்வது இப்போது சர்வ சாதாரணமான விஷயமாகி விட்டது.

ஆனால் உலகில் முதன் முதலாக எங்கே தண்ணீர் விநியோகிக்கும் திட்டம் ஆரம்பமானது என்பது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

மெசபெத்தோமியா நாட்டில் தான் தண்ணீர் விநியோகத்திட்டம் முதலில் ஆரம்பிக்கப்பட்டது.

அந்த நாட்டின் பல நகரங்களுக்கு இப்படி தண்ணீர் விநியோகிக்கப் பட்டது.

ரோமர் ஆட்சியின் கீழ் விநியோகம் செய்யும் முறையில் முன்னேற்றம் செய்யப்பட்டது.

கல்லால் செய்யப்பட்ட வாய்க்கால்கள் மூலமே இத்தண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது. ★

### கதிரவன்

ஜாதிமதம், நிறம் பார்க்காமல் பெரியவன் சிறியவன் என்றும், பணக்காரன் ஏழையென்றும், நல்லவன் கெட்டவன் என்று பாராமல் வெப்பத்தையும் வெளிச்சத்தையும் எல்லோருக்கும் வாரி வழங்குவான்.

### நம்பமுடியாத மருத்துவம்

சொந்தக் கண்களால் கண்டால் கூட நம்பவே முடியாது துண்டிக்கப் பட்ட விரல் மீண்டும் வளர்வதை கற்பனை செய்து தானும் பார்க்க முடியுமா? விரல் மட்டுமல்ல கை, கால், எரிந்து போன தோல்களும் வளர்கின்றன.

இவை இங்கல்ல ரஷ்யாவில் குர்கனியிலுள்ள பரீட்சார்த்த ஆய்வு நிலையத்தில் நடைபெறுகின்ற அதிசயங்கள்.

உருச்சிதைவான, குட்டையான ஒரு எலும்பை சாதாரண நிலைக்கு மாற்றி வளர வைக்கிறார்கள் இங்கே

கத்தியில்லாத அறுவை மூலம் முற்றிலும் புதிய சிகிச்சை முறைகளை இந்த நிலையம் மேற்கொள்கிறது ★

# முகிழ்த்து வரும் ஆண் ஆடற் கலைஞன்

**இளங்கலைஞர் அறிமுகம்**

தமிழர் கலைகளில் ஒன்றான பரதக்கலையை சிறுவயது முதல் பயின்று வந்த மதிநாயகத்தின் நாட்டிய நிகழ்ச்சியொன்றை சென். பற்றிக்ஸ் கல்லூரியில் அண்மையில் பார்க்க முடிந்தது

லயத்தோடு முத்திரை



பதித்த அபிநயமும், பாடலின் ஒவ்வொரு திம்றசம்ரத் பாதகு எடுத்து வைத்த விதமும் மனதைத் தொடும்படியாக அமைந்தன.

கட்டான உடல் அமைப்பும் கணீரென்ற சலங்கையின் நாதமும், ஆடலுக்கேற்ற ஆடை அணிகலன்களும் பக்கபலமாக நின்று மெருகூட்டின.

அடையாறு கலாஷேத்திராவில் ருக்மணி அருண்டேலிடம் பரதநாட்டியம் பயின்ற ஞானமணி செல்லையாவின் தனித்துவம் மிக்க ஆற்றல்களை மதிநாயகத்திலும் காண முடிகின்றது.

கவிஞர் முல்லைக்கவியின் கனிஷ்ட புதல்வரான செல்வன் மதிநாயகம், சென். பற்றிக்ஸ் கல்லூரியில் ஜி. சி. ஈ. சாதாரணதரம் பயின்று வருகின்றார்.

எதிர்காலத்தில் நல்லதொரு ஆண் ஆடல் கலைஞனை மதிநாயகம் மூலம் உலகம் எதிர்பார்க்கின்றது. ★

கலையரசன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அழகோவியப் பெண்வேடமே

## சிவாஜியின் ஆரம்பகால கதாபாத்திரம்

இணையற்ற நடிகர் திலகமும் எனது இளவலுமான சிவாஜிக்கு வயது ஐம்பத்தி ஒன்பது! எனக்கு அறுபத்தி இரண்டு வயது முடிந்து இப்போது அறுபத்தி மூன்று நடந்து கொண்டிருக்கிறது!

அதனால் அவரை எனது இளவல் என்று கூறுவது பொருந்தும் தானே! உடன் பிறவாச்சகோதரர்களாக இருவரும்



ஒருவருக்கொருவர் பாசத்தைப் பொழிந்து கொண்டிருந்தாலும்- உயிர்த்தோழர்களாகப் பல்லாண்டு காலமாகத் திகழ்ந்து வருகிறோம்

சுமார் நாற்பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நண்பர் சரந்தை சண்முகவடிவேலு தஞ்சை மணிக்கூண்டுக் கருகாமையில் ஒரு கடையின் முன்னால் காலை பத்து மணி அளவில் இவர்தான் வி. சி கணேசன் என்று ஒரு ஒல்லியான உருவத்தை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

"அழகோவியப் பெண் வேடம் தாங்கியே பெரும்பாலும் அவர் நாடகங்களில் நடித்து வந்த அந்தக்காலத்தில் கொடி போன்ற அவரது உடலமைப்பு அப்போது "கணேசு" க்கு உதவிகரமாகவே இருந்திருக்கும்.

"நூர்ஜஹான்" வேடம் தாங்கி அவர் நடித்த ஒரு நாடகம் குறித்து கலையுலக கற்றாளர்கள் அனைவரும் போற்றிப் புகழ்வர்.

மூன்று வயதுக்கு மேல் அவருக்கு நான் மூத்தவன் எனினும்- அறிமுகமான காலத்தொட்டே என்னை அவர் "மூனா" என்றும், அவரை நான் "கணேசு" என்றும் அழைத்துப் பழகி விட்டோம்.

சந்திக்குமிடங்களில் நலம் விசாரித்துக்கொண்டிருந்த நிலைமாறி – மிக நெருக்கமான நண்பர்களாக இருவரும் விளக்

### இளவலுடன் கிடைத்த அனுபவம் பற்றி மு. க.

இடக்கூடிய காலகட்டத்தை "பராசக்தி" படம் எங்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தது

1952 ல் அந்தப் படம் வெளிவந்தது எனினும், படத்தின் தயாரிப்புக்கான தொடக்கம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே அமைந்து விட்டதால் மறைந்த நண்பர் பி ஏ. பெருமாள் அவர்களின் நேஷனல் பிக்சர்ஸ் நிறுவனத்தில் கணேசுடனும், பராசக்திபட இயக்குநர்களான கிருஷ்ணன் பஞ்சு ஆகியோருடனும் மறைந்த இயக்குநர் பீம்சிங்குடனும் அளவளாவி பகிர்ந்திட அதிக நேரம் கிடைத்தது

அண்ணாவின் 'சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் அல்லது சந்திரமோகன்" நாடகத்தில் சிவாஜி வேடம் தரித்து நடித்துப்பெரியாரின் வாயினுல் "சிவாஜி" என்று அழைக்கப்பட்ட அந்தக்கால வரலாற்று ஏடுகளைப் புரட்டினால் —

கலையுலகிலும் - அரசியல் உலகிலும் எத்தனை எத்தனை அதிசய மாற்றங்கள்!

பராசக்தி படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் போதே இ. மு க

✱ சினிமா ✱

கொள்கைப் பிரசார நாடகமாக நான் எழுதிய "தூக்குமேடை" நாடகத்திலும் படம் வெளிவந்த பிறகு நான் எழுதிய "பரப்பிரம்ம" நாடகத்திலும் பல ஊர்களில் நானும் அவரும் கழக முன்னணியினர் பலரும் நடித்திருக்கிறோம். தஞ்சை புயல் நிவாரணத்துக்குக் கழகச் சார்பில் நிதியளிப்பதற்



காக நானும், கணேசும் பல ஊர்களில் நாடகங்களை நடத்தோம்.

நெல்லை மாவட்டத்தில் சங்கரன் கோவில் என்று ஒரு ஊர்! அங்கே எங்கள் நாடகம் நடந்தது. மிகவும் வேடிக்கையானது! இறுதியில் வேதனை நிறைந்ததும் கூட!

திறந்த வெளி மைதானத்தில் சுற்றடைப்பு கட்டி நாடக மேடை அமைத்திருந்தனர். நாங்கள் தங்கியிருந்த வீட்டில் குழுவினருக்குச் சாப்பாடு கூட போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை. அரைப்பட்டினி-கால்பட்டினிகளாகக் காத்திருந்தோம்.

குழுவிலிருந்து ஒருவர் சென்று நாடக மேடையைப் பார்த்து விட்டு வந்து "மேடையில் ஒப்பனை (மேக்கப்) செய்து கொள்ள இடமே அமைக்கப்படவில்லை" என்ற தகவலைக் கூறினார்;

"என்ன செய்வது? எங்கே 'மேக்கப்' போட்டுக் கொள்வது!

நிதி நாடகம் ஏற்பாடு செய்த மாவட்டப் பொறுப்பாளர் 'நீங்கள் இந்த வீட்டிலேயே மேக்கப் எல்லாம் செய்து கொண்டு மேடைக்கு வந்து விடுங்கள் இப்போது வேறு எதுவும் ஏற்பாடு செய்ய நேரமில்லை ஏராளமான மக்கள் நாடகத்திற்குக் கூடி விட்டனர்' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

தங்கியிருந்த இடத்திலேயே 'மேக்கப்' போட்டுக் கொண்டு, வண்டி

(7ஆம் பக்கம் பார்க்க)

## நிழலும் நிஜமும்--

(4ம் பக்கத் தொடர்ச்சி)

யாக விஷயத்திற்கு இவன் வந்துவிட்டால் இப்போதைய நிலையில் என்ன பதில் கூற முடியும்? இந்த முரடனிடம் சாமர்த்தியமாக நடந்து கொள்ள வேண்டும் என்ற உணர்வு தலைதூக்க கதையை ஒரு மாதிரி வேறு பக்கம் திருப்புகிறேன்.

கொஞ்சநேரம் இருந்து கதைத்துவிட்டு விடை பெறுகின்றன் தேவன். நானும் வசதியான வேளைகளில் வந்து போகும்படி சொல்லி அவனை வழி அனுப்பி வைக்கிறேன்.

வெறும் ஒப்புக்காக என்றில்லாமல் இவனுடன் கதைக்கும்போது என் மனதின் பாரம் ஓரளவு குறைவது போன்ற மன உணர்வு ஏற்பட்டாலும் மறுபக்கம் இவனது வருகையால் சிக்கல்களும் பிரச்சினைகளும் வளர வழி வகுப்பது போலாகும் எனப் மனது உறுத்துகிறது.

(வளரும்)

## மொழிபெயர்ப்பில்....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

விய பயிற்சிக் கல்லூரி அமெரிக்க மிசனரிமார் பொறுப்பில் நிலவியது. அங்கே பெரியார் ஜெறமையா முதலானோர் பொறுப்புள்ளவர்களாயிருந்தார்கள்.

அக்காலத்தில் கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பொன்னையா அவர்கள் அதிபராயும், எஸ் கே. இராசலிங்கம் உப அதிபராயும், மகாலிங்கசிவம் அவர்கள் தமிழ்ப் பேராசானும் பெயரெடுத்தவர்கள். அங்கே சாதனு பாடசாலை அதிபர் ஞானரத்தினம் அவர்கள் உதவி விரிவுரையாளராயும், வெளியிலிருந்து கௌரவ பகுதி நேர விரிவுரையாளர்களாகப் பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் நடேச பிள்ளை அவர்களும், சைவ வித்தியாவிருத்திச் சங்க முகாமையாளர் இராசரத்தினம் அவர்களும், வித்தியாதரிசி அருணந்தி அவர்களும், பண்டிதர் நாகலிங்கம் அவர்களும் பணி புரிந்தார்கள்

### பெரியோர் சபை

வடமாநிலத்தின் ஊர்ப்புறக்கல்வி நிர்வாக சபை என ஒரு சபை பெரியவர்களைக் கொண்டதாய் நிலவியது அதில் சேர் இராமநாதன் முதல் தலைவராயும், அரசாங்க அதிபர் ஜே. வி. பிறவுண் அவர்கள், கௌரவ வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்கள், கௌரவ இராசரத்தினம் அவர்கள், வகக்கியதுகுத் லொக்வுட் அவர்கள், நெவின்ஸ் செல்வத்துரை அவர்கள், வணக்கத்துக்குரிய ஏ. எஸ் லாட் அவர்கள், வடமாநிலக் கல்விப் பரிசோதகர் ஏச். எஸ். பெரேரா அவர்கள், வடமாநில விவசாய அலுவலர் ஆகியோர் அங்கத்தவராயும் இருந்து பணிபுரிந்தனர்.

இவர்களுள் ஏச் எஸ் பெரேரா அவர்கள் கொழும்பில் அரசினர் ஆங்கில ஆசிரிய பயிற்சிக் கல்லூரி அதிபராயும், கல்விப் பணிப்பாளராயும் பதவி உயர்ந்தவர்

### உசாத்துணை

அவர் உள நூல், கல்வி பயிற்றல் முதலான துறைகளில் ஆங்கிலத்தில் எழுதிய நூல்களைத் தம் அருமை நண்பர் புலோலி சிவபாதசுந்தரம் அவர்களைக் கொண்டு தமிழில் மொழிபெயர்ப்பிக்க விரும்பியபோது, புலோலியார் தாமே அத்துறையில் நூல்கள் எழுத ஆரம்பித்தமையால், சைவாசிரிய கலாசாலை உப அதிபர் பொ. கைலாசபதி அவர்களைக் கொண்டு மொழிபெயர்ப்பித்துக் கொடுத்தார். உப அதிபரின் மொழிபெயர்ப்புக்கு அந்தக் காலத்தில் நல்ல பெயர் நிலவியது. அதில் அவருக்கு உசாத்துணைவராயிருந்து நல்ல தமிழ்ச் சொற்களை உடனுக்குடன் அறிவித்தவர் பண்டிதமணி அவர்களாவர்.

இவ்வாறாக அன்று 1930 ஆம் ஆண்டளவில் இலங்கையில் 1395 அரசினர் பாடசாலைகளும், 2246 உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளும் நிலவியபோது, அரசாங்கம் கல்வியின் பொருட்டு 1,20,53,379 ரூபா வரையில் செலவு செய்தது

(வளரும்)

## தமிழரே ஆதிகள் ;....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும். அதாவது சிங்களவர் வருவதற்கு எத்தனை நூற்றாண்டிற்கு முன் அது கட்டப்பட்டிருக்கும்

அடுத்து எழும் கேள்வி சோழ இளவரசன் என்ன உரிமையுடன் இக் கோவிலைத் திருத்த வந்தான் என்பது தமிழகத்தின் ஒரு பகுதியாகவே ஈழத்தை அவர்கள் கருதியதாலேயே பாழடைந்த கோயிலை திருத்துவதற்காக அவர்கள் வந்திருக்கிறார்கள்

சிங்களவர்களால் அதிகம் மதிக்கப்படும் சிங்களமன்னன் துட்டகைமுனுவே. இவனது காலம் கி மு 150 ஆகும் அவனை ஏன் சிங்களவர்கள் போற்றுகிறார்கள் என்றால் முழு இலங்கையையும் சிங்கள ஆட்சியின் கீழ் கொண்டு வந்த முதல் மன்னன் என்பதால் தான்.

அவ்வாறாயின் அவர்கள் வந்து 350 ஆண்டுகளின் பின்னரே அது நடைபெற்றிருக்கிறது. ஆகாவது இலங்கை முழுவதையுமோ அல்லது இலங்கையின் ஒரு பகுதியையோ சிங்களவரல்லாத வேறு யாரோ ஆண்டிருக்கிறார்கள். யார் அந்த மக்களென்றால் அது நிச்சயமாகத் தமிழர்களே. ஏனெனில் தமிழனுகிய எல்லாளனை வென்ற பின்பே ஆட்சியானது சிங்களவர் கைக்கு மாறுகிறது

எல்லாளனை வென்ற பின் துட்டகைமுனு லட்சக்கணக்கான தமிழர்களை கொன்று குவித்தான் என்று கூறுகிறது மகாவம்சம். அன்றைய லட்சம் இன்று எத்தனை கோடிகளாக மாறியிருக்கும் ஆனால் இன்றோ அவர்கள் விட்டுத் தரப்போகின்ற ஒரு மட்டக்களப்பு மாவட்டத்துடன் இந்தியா பெற்றுத் தரப்போகின்ற ஒரு பாதையுடனும் திருப்தி அடைய வேண்டியதாக எமது தலைவிதி மாறிவிட்டதா? எமது பண்டையோர் கட்டி வைத்த கோணேசர் கோயிலும், தம்பலகாமம் சிவன் கோவிலும், தம்பலகாமம் புராணவயல்களுக்கு நீர்ப்பாய்ச்சவென்றே கட்டப்பட்ட கந்தளாய்க் குளமும் மூலமாக சிங்களவர்களுக்கென்றே எழுதப்படப்போகிறதா?

## சொந்தமண்ணுக்கு ..

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

நான்தான் நெடுந்தீவிலிருந்த பறங்கியருக்கு அறிவித்தேன்...

2400 பறங்கியர் இறந்ததையும், மண்கோட்டையிலிருந்த பொருள்கள் யாவும் மன்னனால் குறையாடப்பட்டதையும் கேட்டு ஆவேசமுற்றுர்கள் ... இப்படியொரு பேரிழப்பும், பெருந்தோல்வியும் பெரும் நட்டமும் அவமானமும் தங்களுக்கு எந்த நாட்டிலும் ஏற்பட்டதில்லை யெனக் குமுறிக் கொந்தளித்தார்கள்... ஆத்திரமுற்றுர்கள் அவர்களின் கோபாவேசத்தை மன்னன் வேஷம் பூண்டிருக்கும் சங்கிலி மீது திருப்பி விடுவதே என் திட்டம்!

மந்திரி; நல்ல திட்டம் தான்... அரசுரிமையை நான் கைப்பற்ற அதைவிட வேறு வழியில்லை... ஆனால் பறங்கியர் மீண்டும் போர்தொடுக்க வரக்கூடுமென்றெண்ணி போர்ப் பயிற்சிகள் மும்முரமாக நடைபெறுகின்றன. பறங்கியர் பாணியிலும் நடைபெறுகிறது.

### கடல் குதிரைகள்!

வன்னி: மந்திரியாரே! அதை நான் முன்னமே அறிந்து தான் தோற்றோடிய பறங்கியர் இனி மீண்டும் வரமாட்டார்களென்ற எண்ணத்தை மன்னன் மனதில் உருவாக்க முயன்றேன்... மீண்டும் மீண்டும் அப்படிச் சொல்லி...

மந்திரி: நான் சொல்வது அதுவல்ல...

வன்னி: புதிராக விருக்கிறதே!

மந்திரி: தான் முக்காலமும் அறிந்தவனென்று அடிக்கடி சங்கிலியன் சொல்வது வழக்கம்... பறங்கியர் மீண்டும் வரமாட்டார்களென்று இனி யார் சொன்னாலும் நம்ப மாட்டான். கடல் மார்க்கமாக வரும் பறங்கியரை நம் பூமியிக்கால் வைக்க வொட்டாமல் கடலிலேயே அழிக்க கடற்படையும் உருவாக்கி விட்டான் மன்னன்...

(வளரும்)

## நாடுகாத்தசிறுவனும்---

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பீற்றர் அவனது பற்கள் கிட்டிக்கொண்டன. நாக்குக்கூட விறைத்து விட்டது.

பீற்றர் நித்திரை கொள்ளவில்லை. விறைத்துப்போன தன் கையை மற்றக் கையால் குடைமுத் தேய்த்தபடியே இருந்தான். தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டான். குளிரும் பசியும் பயமும் அவனை வாட்டிஎடுத்தன அடுத்த நாட்காலை அச்சாலையால் சென்ற ஒருவன் யாரோ முனகும் ஒலி கேட்டு அவ்வொலி வந்த திசையை நோக்கி வந்தான் அங்கே பீற்றரைக் கண்டான். பீற்றர் விஷயத்தைக் கூறித் தாமதிக்காது உதவிக்கு ஆட்களை அழைத்து வரும்படி வேண்டிக் கொண்டான்.

உதவி வந்தது. மதில் திருத்தப்பட்டது நாடு காக்கப்பட்டது வீரச் சிறுவனை நாடே போற்றியது.

இனி வயல்காத்த இந்தியச் சிறுவனது கதையைப்பார்க்கலாம் புராதன இந்தியாவில் தமது பிள்ளைகளைக் கல்விகற்பதற்காக கற்றறிந்த முனிவர்களின் ஆச்சிரமத்துக்குப் பெற்றோர்கள் அனுப்புவார்கள்.

தௌமிய முனிவர் என்றொரு மகான் வாழ்ந்து வந்தார். அவரிடம் கல்வி கற்பதற்காக இரு மாணவர்கள் வந்தார்கள். ஒருவன் பெயர் அருணி. மற்றவன் பெயர் உபமன்யு. இருவரும் குருவான தௌமியரின் சொற்படி கேட்டு தமது ஒழுக்க முறையிலே கல்வி கற்று வந்தார்கள்.

அப்பொழுது மழைக் காலம். வயல்களோ வானம் பார்த்த பூமி. எனவே பெய்யும் மழையை ஒழுங்காக வயலிற் தேக்கினுற்தான் பயிர் விளையும் தௌமியர் அருணியை அழைத்தார் வயல் நீர் ஒருங்காகத் தேங்கி நிற்கிறதா? வரம்புகள் ஒழுங்காக இருக்கிறதா? என்று பார்த்து வா' என்றார்.

மழையோ பேய் மழையாகக் கொட்டியது. அத்துடன் குளிர்காற்று சவுக்கடிப்பது போன்ற கடுமையுடன் வீசிக் கொண்டிருந்தது. இருப்பினும் அருணி குருவின் கட்டளையை ஏற்று தன்னந்தனியனாக வயல் நோக்கிப் பயணமானான்.

எங்கோ நீர் சலசல என்று ஓசையுடன் பாய்ந்து கொண்டிருந்தது அருணியின் காதுகளில் விழுந்தது. அருணி சப்தம் வந்த திசை நோக்கிச் சென்றான். அங்கே வயல் வரம்பொன்று உடைப்பெடுத்து நீர் வெளியேறிக் கொண்டிருந்தது உடைப்பை அடைப்பதற்கு ஏதாவது கல் அருகில் இருக்கிறதா? என்று சுற்றுமுற்றும் பார்த்தால் உடைப்பை அடைப்பதற்கு ஏற்றதாக எதுவுமே கிடைக்கவில்லை.

அருணி யோசித்தான். சிறிய உடைப்பு பெரிதாகி விட்டால் வயலில் உள்ள நீர் யாவும் வெளியேறிவிடும். இவ்வருட விளைச்சல் இல்லை. இதற்கேதாவது செய்துதான் ஆகவேண்டும். உடனே உடைப்பை மூடித் தண்ணீருக்குள் படுத்துவிட்டான் தனது உடம்பையே வரம்பாக்கி விட்டான் அருணி.

உடல் விறைக்க ஆரம்பித்து விட்டது. குளிர் காற்று வீசியது. அவன் மீது மழைத்துளிகள் படபட என்று விழுந்தன. அருணி அசையவில்லை வயல் பார்க்கச் சென்ற அருணியைக் காணாது தௌமியர் கலவரம் அடைந்தார். நேரம் சென்று கொண்டிருந்தது, இனிமேலும் தாமதிப்பது சரியில்லை உபமன்யுவை அழைத்தார். இருவருமாகச் சேர்ந்து அருணியைத் தேடிப் புறப்பட்டனர்.

தன்னையே வரம்பாக்கித் தண்ணீரில் படுத்திருந்தான் அருணி தௌமியர் பாய்ந்து. சென்று அருணியை வாரி எடுத்து அணைத்தார்.

'மகனே உன்போன்ற தியாகச்செம்மலை நான் காணவே இல்லை. வயலுக்குச் சேர்ந்த தண்ணீர் போதும் என்னுடன் வா' என்று அழைத்தார்.

அருணி கைகூப்பி நின்றான் தௌமியர் அருணியை நோக்கி இன்று தான் உனது கல்வி பூர்த்தியாயிற்று. இனி மேல் உனது பெயர் உத்தாலகர் என்று ஆசீர்வதித்தார்.

இவ்விரு கதைகளில் வரும் சிறுவர்களும் வீரம் மிக்கவர்கள். ஒருவன் விரல் விறைக்குமட்டும் நாடு காத்தான். மற்றவனே ஒருபடி மேலே சென்று உடல் விறைக்கு மட்டும் வயல் காத்தான். இருவரும் ஒருவர்க்கொருவர் சளைத்தவர்கள் இல்லை. மனிதனின் நல் இயல்புகள் தியாகங்கள் மேற்கென்ன கிழக்கென்ன ஒன்றே என்று இச்சிறுவர்களின் கதை துகாட்டுகின்றன. இது [illegible] வென்றே கூறவேண்டும்.

✱

## ஞான சஞ்---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இருதி என்னும் திரை மறைத்துக் கொண்டிருக்கிறது. தற்சிந்தனைகளாலும், நற்கர்ம காரியங்களாலும் அத்திரையை மெல்லமெல்ல அழித்த பின் ஆத்மாவின் ஒளி பிரகாசிக்கின்றது என்று வேதங்கள் கூறுகின்றன.

ஜீவாத்மா தனது ஸ்தூல சரீரத்தையும் சூட்சும சரீரங்களையும் வாகனங்களாக (Vehicles)க் கொண்டு உலக அனுபவங்களைப் பெறுகிறது. தன் முனைப்பு இருக்கும் வரையில் பிரகிருதியிலிருந்துவிடுதலை பெறவும் கர்மாவை [illegible] அதனால் இயலாது.

ஜீவாத்மாவுக்கு தனித்துவம் பெற்ற உணர்வு நிலை படிப்படியாக உருவாகி இறுதியில் அது அற்றுப்போய் பரமாத்மாவுடன் கலந்துவிடும் பாங்கு இருப்பதால் அதை "க்ஷரம்" (அழி பொருள்) என்றும் சொல்லப்படுகிறது.


வண்ணத்துப்பூச்சி பரிணும வளர்ச்சி பெற்று தனது கூட்டிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு பறந்து செல்வதுபோல் ஜீவாத்மாவும் ஆன்ம ஈடேற்றம் பெற்று கர்மா என்னும் தளையிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு பரமாத்மாவுடன் ஐக்கியமாகிவிடுகிறது.

ஒவ்வொரு ஜீவனும் தெரிந்தோ தெரியாமலோ ஆன்மீகப் படிமுறை வளர்ச்சி நோக்கிச் சென்றுகொண்டே யிருக்கிறது.

✱

# சொற்சிலம்பம்

## போட்டி இல. 47



அனுப்புபவர் பெயர்:

திரு/திருமதி/செல்வன்/செல்வி: ---------------------

---------------------------------------------------

வயது: -------------------

விலாசம்: -------------------

-------------------

ஒப்பம்: -------------------

### போட்டி விதிகள்

சொற்சிலம்பப் போட்டி விதிகள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் வெளியாகும்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. உதயனை நாடிப் பூக்கும் மலர் | 1 வலுசெட்டிக்காரன் |
| 5. உணர்ந்து மகிழ் | 2. முனிவன் |
| 6. வித்தை | 3 தட்சணை |
| 7. வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டியதொன்று | 4. சிரசு |
| 8. புன்சிரிப்பு | 6 அமரகாவியம் படைத்தவன் |
| 9. வடக்கின் கற்பகதரு | 7. கோபப்படுதல் |
| 10 ஒருவகை போதை வஸ்து | 10. மாமா |
| 11 ஆரம்பம் | 11. மகிழ்ச்சி |
| 13 குசேலர் கண்ணனுக்கு எடுத்துச் சென்றது | 12. நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய உயிரினம் |
| 14 குளிகை | 18. சபை |
| 16. தென் இந்தியாவில் உள்ள ஆறு | 15 திக்கு |
| 17 ஏழைகளின் கூரையாக இதைச் சொல்வர் | (வலது பக்க மேல் மூலைச் சதுரத்தை 4 ஆம் இலக்கமாகக் கொள்க) |

### சொற்சிலம்பம் இல. 45 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. வங்காள விரிகுடா | 1. வரகவி 2. காளிதாசன் |
| 6. கல் 7. கடுதாசி | 3. விடை |
| 9. நான் 10. சதைபப் | 4 ஞான் 5. டால் |
| 13. மசன் 14. திரு | 8 சிதை 9. நாம |
| 15. ஆவா 16. சன்ய[illegible] | 11. யமன் 12 தரு |
| 18. குவதுக் 19. கபிலீ | 13 மாயாவதி 14. தம்பி |
| 21. திறி 22. திறல் | 15 ஆகுதி 16 சக்தி |
| | 17. மகன் 20. லோ |

### சொற்சிலம்பம் இல. 45 பரிசு பெற்றவர்கள் விபரம்

முதலாம் பரிசு:- செல்வன். கு. சந்திரகுமார் இல 48, ஆடியபாதரோட்' கல்வியங்காடு.

இரண்டாம் பரிசு:- திரு. சுந்தையாசிவானந்தன் ஸ்ரீராம் ரெக்ஸ்டைல்ஸ், கோண்டாவில் ரோட், இருபாலை

மூன்றும் பரிசு:- செல்வன் வி. சிவசங்கர் யா/இந்துக்கல்லூரி ஒழுங்கை, பண்டத்தரிப்பு.

✱ பரிசு பெற்றவர்களுக்கு உரிய பணம் காசோலை மூலம் அனுப்பி வைக்கப்படும். நேரில் எவரும் வரவேண்டியதில்லை

## பாட்டுக்குப் பாட்டெடுத்து----

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பாடுங்கள், பாடுங்கள்' கவிஞன் தன்னுடன் சேர்ந்து மலர்களையும் பாடச் சொல்கின்றானே!

'மலரே குறிஞ்சி மலரே, தலைவன் சூட நீ மலர்ந்தாய், பிறந்த பயனை நீ அடைந்தாய்'

'மலரே மலரே தெரியாதோ மனதின் நிலைமை புரியாதோ'

இப்படிப் பொதுவாக மலர்களுடன் பேசும் கவிஞனுக்கு மல்லிகையில் ஒரு தனி விருப்பம் போலும்—

'மல்லிகை என் மன்னன் மயங்கும் பொன்னை மலரல்லவோ!'

'மல்லிகைப்பூ ஜாதி ரோஜா முல்லைப் பூ வேண்டுமா'

'குண்டு குண்டு மல்லிகை இது வண்டே தொடா மல்லிகை'

'கொட்டு வைத்த மல்லிகை மொட்டு பூத்திருக்கு வெட்கத்தை விட்டு'

'பூமாலையில் ஓர் மல்லிகை இதில் நான் தான் தேன் என்றது. எந்தன் வீடு தேடி வந்தது, இன்னும் வேண்டுமா? என்றது'

'காலங்களில் அவள் வசந்தம், கலைகளிலே அவள் ஓவியம், மாதங்களில் அவள் மார்கழி, மலர்களிலே அவள் மல்லிகை"

### வசந்தம்

மலர்களுக்கும் வசந்தத்துக்கும் நல்ல உறவு இருக்கிறது என்பது எல்லோருக்குமே தெரிந்த விஷயம் தான்.

ஆனால் கவிஞன் காணும் போது அது கவிதையாக மலர்கிறது.

வசந்தமுல்லை போலே வந்து அசைந்து ஆடும் வெண்புறாவே! மாயமெல்லாம் நானறி

(7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடக்கையும் கிழக்கையும் இணைத்தாலே தீர்வு சாத்தியம்

## நெடுமாறன் பி. பி. ஸிக்குப் பேட்டி

இலங்கை அரசு தமிழர்களைப் பிரித்தாள நினைக்கிறது வடக்கு மாகாணத் தமிழர்களை வேறாகவும் கிழக்கு மாகாணத் தமிழர்களை வேறாகவும் பிரித்து அவர்கள் நடுவே ஒரு பிளவை உண்டாக்குவதற்கு இலங்கை அரசு திட்டமிடுகிறது

கடந்த வாரம் லண்டனுக்கு விஜயம் செய்த இந்திய காமராஜர் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு ப நெடுமாறன் லண்டன் பி பி சிக்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

வியாழன் இரவு இப் பேட்டி ஒலிபரப்பானது பேட்டியை ''சஞ்சீவி'' வாசகர்களுக்கு முழுமையாகத் தருகிறோம்.

கேள்வி:- இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படும் காலம் நெருங்கிவிட்டது என நினைக்கிறீர்களா?

பதில்;- இக் கேள்விக்கு திட்டவட்டமாகப் பதில் சொல்வது கடினம். ஏனென்றால், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு விரைவில் வரவேண்டும் என்றுதான் எல்லோரும் விரும்புகிறோம்.

அத்தகைய தீர்வு வரும் என்பது சர்வதேச நிலையையும் பொறுத்தது.

அந்த வகையில் முன்பு இருந்ததைவிட இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு வருவதற்கு பிரகாசமான காலம் இருக்கிறது என நான் நினைக்கிறேன்

கேள்வி:- இலங்கை அரசு வைத்துள்ள புதிய சமாதானத் திட்டம் பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில் - அந்தச் சமாதானத்திட்டத்தை முற்றிலுமாக சகல தமிழ்க் குழுக்களும் நிராகரித்து விட்டன ஆகவே அந்த சமாதானத்திட்டத்தில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை என்பது தெளிவாகிவிட்டது.

கேள்வி:- இது விவேகமான செயலா? தமிழ்க் குழுக்கள் சமாதானப் பேச்சில் கலந்து கொண்டிருக்கலாமே.

பதில்:- சமாதானப் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்வதற்கு அடிப்படையாக ஏதாவது ஒன்று வேண்டும். எதுவுமே இல்லாமல் மூன்று ஆண்டுகளாக ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு சமாதான சமரசத் திட்டத்தை ஜெ. ஆர். ஜெயவர்த்தனா முன் வைக்கிறார் பின்னர் அதை ஏற்க முடியாத அளவுக்கு அவரே தடை செய்கிறார். இந்த காரணங்களினால் தான் அவரது பேச்சில் அவர்கள் கலந்து கொள்ளவில்லை

திம்பு மாநாட்டில் தமிழ்க் குழுக்கள் அத்தனையும் ஒன்று சேர்ந்து நான்கு அடிப்படை அம்சங்கள் கொண்ட திட்டம் ஒன்றை கொடுத்தார்கள். இந்த அடிப்படையில் தான் சமாதானப் பேச்சு நடத்த முடியும் என்று சொன்னார்கள்

அந்த நான்கு அம்சங்களில் எதையும் ஜெயவர்த்தனா எடுத்துக் கொள்ளவில்லை

ஆனால் அவற்றை ஜெயவர்த்தனா ஒப்புக் கொள்கிறவரையில் எந்தவொரு சமரசப் பேச்சும் வெற்றியாகாது.

கேள்வி:- இந்திய அரசும் தமிழ்நாட்டு அரசும்- தமிழ்க் குழுக்கள் இந்த சமாதானத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளும் வரை தமிழ்க் குழுக்களுக்கு நெருக்கடி கொடுத்து வருகிறதே இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: இந்திய அரசும் தமிழக அரசும் இந்தப் பிரச்சினையை எப்படிப் பார்க்கின்றன? இலங்கைத் தமிழ்மக்கள் எதை விரும்புகிறார்கள்? எதற்காகப் போராடுகிறார்கள்? 30 ஆண்டுகளாக அவர்களது போராட்டத்தின் தன்மை என்ன? இவைபற்றி உணருகிறார்கள் இல்லை இலங்கைத் தமிழர் பிரச்சினையால் இந்தியாவில் தமிழகத்தில் எந்தப் பிரச்சினையும் வந்துவிடக் கூடாது என்ற எண்ணத்தில் தான் இலங்கைத்தமிழர் பிரச்சினையைப் பார்க்கிறார்கள்.

இப்படியாவது ஒரு வகையில் அரைகுறையாகவாவது ஒரு சமரசத் தீர்வை ஏற்படுத்தி இந்தப் பிரச்சினையை முடித்துவிட வேண்டும் என்று அவசரப்படுகிறார்கள் அதுதான் உண்மை.

இலங்கைத் தமிழர்களுக்கு நிரந்தரமான தீர்வு வரும் வகையில் இந்தப் பிரச்சினையை முடிக்க வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுகளுக்கு வந்தால் ஒழிய இலங்கைப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு வராது

கேள்வி:- தமிழ் மக்களுக்கு தமிழ் நாட்டு மக்களிடையே ஆதரவு குன்றி வருவதாக கூறப்படுகிறது அண்மையில் தமிழ்க் குழுக்களின் ஆயுதங்கள் பறிக்கப்பட்ட போதும் தமிழ்க் குழுக்களின் செய்தித் தொடர்புக் கருவிகள் கைப்பற்றப் பட்ட போதும் கூட தமிழ்நாட்டு மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லையே! இது ஏன்?

பதில்:- அப்படிச் சொல்வது தவறு ஏன் என்று சொன்னால் தமிழ்க் குழுக்களிடம் ஆயுதங்களைப் பறித்து அரசு இரண்டு நாட்களில் திருப்பிக் கொடுத்துவிட்டது மக்களின் எதிர்ப்பு இல்லாமல் திருப்பிக் கொடுத்திருக்குமா? இந்த நடவடிக்கை எடுப்பதற்கு முன்பு யோசிக்கவில்லை மக்களிடம் இது சம்பந்தமாக எதிர்ப்பு உருவாகிவிட்டது என்று தெரிந்தவுடன் இந்திய அரசு தனக்கும் இந்த நடவடிக்கைக்கும் சம்பந்தம் இல்லை என்று அறிவித்துவிட்டது உடனடியாக தமிழக அரசு அதைத் திருப்பிக்கொடுத்துவிட்டது ஏனென்றால் பிரச்சினை முற்றுவதை இந்த இரு அரசுகளும் விரும்பவில்லை:-

கேள்வி:- தமிழ்க்குழுக்களிடம் இருந்து செய்திக் கருவிகளை பறிமுதல் செய்தது நடுவண் (மத்திய அரசு அல்ல தமிழ் நாட்டு அரசுதான்

முன்பெல்லாம் தமிழ் சாந்தடிப்படை இயக்கங்களுக்கு ஆதரவு வழங்கிய முதல் அமைச்சர் மனம் மாறியதற்கு என்ன காரணம்?

பதில்:- தமிழ் நாட்டு முதல் அமைச்சரைப் பொறுத்தவரை, அவர் எப்போதும் இந்திய அரசு என்ன நிலை எடுத்து வருகிறதோ அதே நிலையையே அவரும் எடுத்து வந்திருக்கிறார்.

இந்திய அரசுக்கு மாறான நிலையை ஒரு போதும் எடுத்ததில்லை.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை இந்திய அரசிடம் சொல்லி அதை வற்புறுத்தவேண்டிய அவர் இந்திய அரசு என்ன சொல்கிறதோ அதை இலங்கைத் தமிழர் பிரதிநிதிகளிடம் வற்புறுத்துவதையே தன்னுடைய வேலையாக கொண்டிருக்கின்றார் ஆகவே அவரிடம் இருந்து இதற்கு தீர்வு எதையும் எதிர் பார்க்கமுடியாது

கேள்வி:- இந்தியாவின் வழியும் தமிழ் நாட்டின் உறுதியும் இன்றி தமிழ் சாந்தடிப்படை இயக்கங்களால் செயல்பட முடியுமா?

பதில் :- இப்பொழுது இலங்கையில் தமிழர் பகுதிகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமும் மற்றவர்களும் ஓரளவு இராணுவத்தை முறியடித்து பல பகுதிகளை தங்களுடைய ஆதிக்கத்தில் கொண்டுவந்து இருக்கிறார்கள் அதனால் அது தமிழீழ மக்களின் ஆதரவினாலும் இந்தியாவிலுள்ள தமிழ் மக்களின் ஆதரவினாலும் தான்

பகிரங்கமாக அவர்களுக்கு இந்திய அரசோ தமிழக அரசோ எந்த உதவியும் செய்யவில்லை என்பது உண்மை அப்படி அவர்கள் உதவி செய்திருந்தால் இதற்குள் அந்தப் பிரச்சினை முடிந்துபோய் இருக்கும் ஆனாலும் தமிழ் மக்களின் ஒன்றுபட்ட ஆதரவு இருக்கும்வரை அவர்கள் தொடர்ந்து போராடுவார்கள் அந்தப் போராட்டம் முன் எடுத்துச் செல்லப்படும்

கேள்வி:- இந்திய தமிழ்க் குழுக்களின் நடவடிக்கைகளை ஏற்கனவே கட்டுப்படுத்தி வருகின்றது ஒன்று சமாதானத் திட்டம் குறித்து இலங்கை அரசுடன் பேச்சு நடத்துங்கள் அல்லது இந்தியாவை விட்டு வெளியேறுங்கள் என்று இந்தியா கூறினால் தமிழ் சாந்தடிப்படைகளின் நிலைமை என்ன? தமிழர்கள் ஒன்றுபட்டால் அவர்களை வெல்லுவது கடினம் தமிழர்களைப் பிரித்து வைப்பதன் மூலமே அவர்களை அடக்கி ஆளமுடியும் என இலங்கை அரசு நினைக்கிறது

ஆகவே தமிழர்களுக்கு ஒன்றுபட்ட தாயகம் தான் வேண்டும் அப்போதுதான் தமிழர்கள் பாதுகாப்பாக வாழ முடியும் என்று தமிழர்கள் நினைப்பதில் தவறில்லை.

இந்தியாவில் கூட தமிழகத்தின் பல பகுதிகள் வெள்ளையர் ஆண்ட காலத்தில் தமிழ் நாட்டோடு இல்லை

எதனால் அதைப் பிரித்து தமிழகத்துடன் சேர்த்தார்கள்?

மொழிவாரி மாநிலங்கள் உருவாகும்போது ஒரு மொழி பேசுகின்ற மாநில மக்களுக்கு ஒன்றாக இணைக்கப்படுகின்ற தாயகம் அமைக்கப்பட்டால்தான் அவர்கள் ஒற்றுமையாக வாழமுடியும்.

தங்களுடைய மொழி கலாசாரம், பண்பாடு போன்றவற்றை வளர்க்க முடியும் இந்தியாவில் மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்ட நோக்கம் அதுதான்

அந்த நோக்கத்தில் தான் இலங்கையில் உள்ள தமிழர்கள் தமது மாநிலங்களை ஒன்றாக இணைக்கவேண்டும் என சொல்கிறார்கள்

கேள்வி:- கிழக்கு மாகாணத்தில் கணிசமான அளவு முஸ்லிம் மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் வடமாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைக்கப்படுவதை விரும்பவில்லையே?

பதில்:- விரும்பவில்லை என்று; சிங்களவர் பிரசாரம் செய்கிறார்கள் கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம்கள் மதத்தால் வேறுபட்டவர்கள் ஆயினும் அவர்கள் மொழி அடிப்படையில் தமிழர்கள் அவர்கள் பேசுவது தமிழ்மொழி ஆகவே அவர்களுக்கு எதுவும் தெரியாது.

கேள்வி;- தமிழ் சாந்தடிப் படைகளுள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நீங்கள் அதிகம் ஆதரவு வழங்கி வருவதாக கூறப்படுகிறது உண்மையா?

பதில்;- என்னைப் பொறுத்த வரையில் தமிழ் ஈழம் மலரவேண்டும். இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை தீர வேண்டும் என்று சொன்னால் அதற்கு ஒரு வழி வள்ளுவப் பெருந்தகை சொன்னது போல ''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண்விடல்''

இந்தப் பிரச்சினையை யாரால் வெற்றிகரமாக முடிக்கமுடியும்? யாருக்கு அத்தகைய வலிமை இருக்கிறது? என்பதை நான் பார்க்கிறேன். அந்த வலிமை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கே இருக்கிறது

அவர்களுக்கு தமிழ் மக்கள் பேராதரவு கொடுக்கிறார்கள் ஆகவே நானும் அவர்கள் மூலம் இது வெற்றி அடையும் என நினைத்து அவர்களுக்கு என்னுடைய ஆதரவைக் கொடுக்கிறேன்

மற்றவர்களையும் ஆதரவு கொடுக்கும்படி நான் வேண்டிக் கொள்கிறேன்

கேள்வி:- தமிழ் குழுக்களுக்குள் ஒற்றுமையின்மை முதலில் ஒற்றுமையைக் கொண்டுவாருங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தலாமே

பதில்:- ஒற்றுமை என்பது ரொம்ப நல்ல விடயம்தான் அதை நான் மறுக்கவில்லை ஆனால் ஒற்றுமை எங்கே வரவேண்டும்?

போர்க்களத்திலே ஒற்றுமை வர வேண்டும்.

இந்தியாவிலோ, பிரிட்டனிலோ, உட்கார்ந்து கொண்டு ஒற்றுமை பற்றிப் பேசுவதில் பயன் இல்லை போர்க்களத்தில் யார் நிற்கிறார்கள்? அந்த மக்களோடு யார் நின்று போராடுகிறார்கள்? உண்மையிலேயே விடுதலை வரவேண்டும் என்பவர்கள் ஒத்துப் போவார்கள்

ஆகவே எல்லா நாடுகளிலும் விடுதலை இயக்கங்களுக்கு போட்டியாக விடுதலை இயக்கம் தோன்றுவது உண்டு

அதற்கு பின்னணியாக பல சக்திகள் இருப்பதும் உண்டு

ஆகவே அந்தவகையில் இந்த ஒற்றுமை மலர்வதை நான் எதிர்க்கவில்லை ஆனால் ஒற்றுமை ஒற்றுமை என்று பேசிக் கொண்டு அதற்காக போராட்டத்தை ஒத்திப் போடச் சொல்வது சரியல்ல.

யார் யார் போர்க்களத்தில் போராடிக் கொண்டிருக்கிறார்களோ யார் களத்தில் நிற்கிறார்களோ அவர்களுக்கு குடிமக்கள் உதவ வேண்டும். அதுதான் முக்கியமானது.

(இ - 10)

- தொகுப்பு: கே. ஆர் -

---

அரசு விடுவித்த குஞ்சு பேட்டி:

# சயனைட் குப்பி தவறியதாலேயே கடற்படையிடம் மாட்டிக்கொண்டேன்

## கோட்டை முகாமில் குளித்த போது எனது காலுக்குக் கீழே சுட்டனர்

இந்தியாவில் இருந்து வந்த எமது படகு பொலிகண்டிப் பகுதியில் வைத்து கடற்படைத் தாக்குதலுக்கு இலக்காகித் தீப்பற்றியது

என்னுடன் வந்த மற்றப் பதினொரு போராளிகளும் கடற்படையினரின் சூட்டுக்கு உயிரிழந்தனர் அல்லது சயனைட் அருந்தித் தற்கொலை செய்து கொண்டனர்

கடலில் பாய்ந்த சமயம் எனது சயனைட்குப்பி தவறியதும் நான் படையினரிடம் அகப்பட்டுக் கொண்டேன்.—

இப்படிக் கூறினார் கைதிகள் பரிமாற்றத்தில் விடுவிக்கப்பட்ட புலிகள் இயக்கப் போராளி செல்லக்குமார் (குஞ்சு). இவருக்கு வயது 24.

1986 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி வடமராட்சி பொலிகண்டியில் கடற்படையினரால் போராளிகளின் படகு ஒன்று தாக்கப்பட்ட சம்பவத்தின் போது இவர் கைது செய்யப்பட்டார்

புலிகளின் மட்டக்களப்பு மாவட்டப் பொறுப்பாளர் அருணா இந்தச் சம்பவத்தில் தான் உயிரிழந்தார் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தியாவிலிருந்து 12 போராளிகளுடன் வந்த இந்தக் கப்பல் குடாநாட்டின் கரையை அண்மித்தபோது கடற்படைப் படகு ஒன்று திடீரெனக் குறுக்கிட்டு அப்படகைத் தாக்கியது போராளிகளும் திருப்பித் தாக்கினர்.

போராளிகள் படகின் எரிபொருள் தாங்கியில் தீப்பிடித்ததையடுத்து படகு வெடித்துச் சிதறியது

சயனைட் தவறியது

அதைத் தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்கள் குறித்து செல்லக்குமார் 'சஞ்சீவி'க்குக் கூறியதாவது:-



படகு வெடித்துச் சிதறியபோது நாம் [illegible] இலக்கானோம் நானும் என்னுடன் வந்த மற்றைய பதினொரு போராளிகளும் கடலில் பாய்ந்து நீந்தினோம்.

கடற்படையினர் நீருக்கு மேல் ஒளியைப் பாய்ச்சி எங்களைத் தேடித் தேடிச் சுட்டார்கள்

சயனைட் குப்பி வைத்திருந்த அனைவரும் அதனை அருந்தி தற்கொலை செய்து கொண்டனர். படகு சிதறி கடலில் பாய்ந்தபோது நான் வைத்திருந்த சயனைட் குப்பியைத் தவறவிட்டுவிட்டேன். அதனால் என்னால் ஒன்றும் செய்ய முடியாமல் போயிற்று

என்னை மட்டும் அவர்கள் கயிறெறிந்து ஒன்றைக் கடலில் வீசிக் காப்பாற்றி கப்பலில் ஏற்றினார்கள்.

கப்பலில் வைத்து எனக்கு இரண்டொரு அடி விழுந்தது எனினும் அதற்குப் பின்னர் விடுவிக்கப்படும்வரை என்னை அவர்கள் கடுமையாகச் சித்திரவதை செய்யவில்லை.

கடற்படைக் கப்பலில் இருந்து என்னைக் காரைநகர் முகாமுக்குக் கொண்டு சென்றார்கள்

காரைநகரில் ஒருநாள் வைத்திருந்த பின்னர் பலாலி முகாமுக்குக் கொண்டு சென்றனர் அந்த வாரக் காலம் [illegible]

இதன் பின்னர் யாழ். கோட்டை இராணுவ முகாமில் என்னை வைத்திருந்தார்கள்

இந்த வேளையில்- 1986 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10 ஆம் திகதியளவில் — விடுதலைப் புலிகள் யாழ் கோட்டைமீது மோட்டார் ஷெல் தாக்குதலை நிகழ்த்தினார்கள் இந்தத் தாக்குதலில் இராணுவத்தினர் 3 பேர் கொல்லப்பட்டனர்.

காலில் சூடு

இதனால் கோபமுற்றிருந்த சிப்பாய்கள் மூன்று நாட்கள் கழித்து தருணம் பார்த்து—நான் குளித்துக் கொண்டிருந்த வேளையில் எனது காலில் சுட்டார்கள்.

இதனால் எனது கணுக்காலுக்கு மேல் பகுதி முற்றாக முறிந்தது.

என்னைச் சுட்ட இராணுவச் சிப்பாய் நான் தன்னுடைய ஆயுதத்தைப் பறிக்க முயன்றதால் தான் சுட்டதாக மேலதிகாரிக்குத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தையடுத்து உடனடியாக என்னை ஹெலிகொப்டர் மூலம் பலாலி முகாமுக்குக் கொண்டு சென்றனர்

அடுத்த நாள் விமானம் மூலம் கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரிக்கு என்னைக் கொண்டு சென்று அங்கு இரண்டு மாதகாலம் சிகிச்சை அளித்தனர்.

அதன் பின்னர் வெலிக்கடை சிறை ஆஸ்பத்திரியில் மூன்று மாதகாலம் என்னை வைத்திருந்தனர்

மூன்று நாட்களுக்கு முன்னர் கொழும்பில் இரகசியப் பொலிஸ் தலைமையகத்தின் 4 ஆம் மாடியில் வைத்து எனது வாக்குமூலம் ஒன்றைப்

([illegible] ஆம் பக்கம் பார்க்க)

---

## அழகோவிய ..

(6-ம் பக்கத் தொடர்ச்சி) களில் ஏறி நாடகம் நடக்கும் இடத்திற்குப் போனோம்

நாடக அரங்குக்குச் செல்லத் தனிவழியில்லை பெண்ணும் ஆணுமிருக்கும் மக்களுக்கிடையே தான் நடந்து சென்று 'ஸ்டேஜில்' ஏறிக் கொள்ள வேண்டுமென்றும் நாடக அமைப்பாளர் திட்டவட்டமாகக் கூறிவிட்டார் நாடகம் காண ஆயிரக்கணக்கான மக்கள்!

அந்தக் கூட்டத்தை நடுவிலே பிளந்து கொண்டு நாங்கள் 'மேக்கப்' முகங்களுடன் சென்றாக வேண்டும்

வேறு வழியின்றி எல்லோரும் தலையில் துணியைப் போட்டு முகத்தை மூடிக்கொண்டு, கண்களை மட்டும் மறைத்துக் கொள்ளாமல் அந்தக் கூட்டத்தின் மத்தியில் கூனிக்குறுகி எப்படியோ மேடைக்குப் போய்ச் சேர்ந்தோம்.

காஞ்சி சிவி எம். அண்ணாமலை சகோதரர் அரங்கண்ணல், மற்றும் காஞ்சிபுரத் தோழர்கள் உடன் பிறப்புக்கள் பலர் எங்கள் குழுவில் இருந்தனர்.

நாடகம் சிறப்புற நடந்தது! பார்வையாளர்கள் மெத்த மகிழ்ச்சியுடன் கரவாரம் செய்தனர்! நல்ல வசூல்! நல்ல அளவுக்கு நிதி தரப்படும் எனக் காத்திருந்தோம்.

— ஆனால்

பொறுப்பேற்று நாடகத்தை நடத்திய அந்த மாவட்டப் பிரமுகர் வசூலான பணத்துடன் மாயமாய் மறைந்து விட்டார்.

சங்கரன் கோயிலில் இருந்து சென்னை திரும்ப- வழிச் செலவுக்கு எங்களிடம் சல்லிக்காசு இல்லை மறைந்தவர்; மறைந்தவர் தான்! இப்போது தமிழ் நாட்டில் ஒரு கட்சியில் முக்கிய பொறுப்பு ஒன்றை வகிக்கிறார்

(மிகுதி அடுத்த வாரம்)

---

## பஞ்சாப்பின் இளங்கதிர்...

(3ஆம் பக்க தொடர்ச்சி) லாறு படைக்கப்படவில்லை.

இன்று பஞ்சாப் என்றால் தெரியாதவர் எவரும் இங்கு இருக்க முடியாது இந்திராகாந்தியின் இன்னுயிரைப்பறித்தவர்கள் பஞ்சாப் சீக்கிய தீவிரவாதிகளே என்பது நாடறியும், பஞ்சாப்பில் சீக்கியர்களுக்கும் இந்துக்களுக்கும் இடையே படுகொலைகள் நடந்துவருகின்றன.

அன்று பாஞ்சாலம் (பஞ்சாப்)மிகப் பிரசித்தி பெற்ற நகரமாக இருந்தது இம்மாநிலத்தில் சீக்கியர் சிறப்புற்று விளங்கினர் அவர்களுக்குச் சிங் என்பது குலப்பெயர்

ஆங்கிலேயர் பாரத நாட்டைக் கைப்பற்றிய பின் இந்தியர் ஆயுதங்களை வைத்திருக்கக் கூடாது என ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தனர்

சீக்கியர் தம்மை ஏனையோரிடமிருந்து வேறுபடுத்த ஆயுதங்களுடனேயே செல்வது வழக்கம். வெள்ளையர் ஆட்சிக்கு முன்னரும் சரி அவர் ஆட்சிக்காலத்திலும்சரி, இன்றும் சரி ஆயுதம் ஏந்தியவைராயினர்.

எந்தச் சட்டத்தாலும் அவர்கள் ஆயுதத்தைப் பறிமுதல் செய்யமுடியாமல் போயிற்று. சீக்கியரின் வீரத்திற்கு இது ஓர் எடுத்துக்காட்டு

இத்தகைய வீரஞ் செறிந்த சீக்கிய குலத்திக் கிருஷ்ண சிம்மன், அஜித் சிம்மன் என்ற வீரச் சகோதர தியாகிகள் இருந்தனர். ஆங்கிலேயரை வெளியேற்ற 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் வலுவடைந்தவேளை இவர்கள் இருவரும் தம்மை இவ்வியக்கத்தில் இணைத்துக்கொண்டனர்.

பாரத மாதாவின் கொடி பட்டொளி வீசிப் பறக்க அறப்போர் புரிந்தார்கள்

வெள்ளையனின் ஆட்சிக்கு எதிராக 1906 இல் பாஞ்சாலத்தில் புரட்சி வெடித்தது.

ஏகாதிபத்தியம் ஒழிக! வந்தே மாதரம்! என்ற வீரகர்ச்சனை செய்து புரட்சிப் போர் முழக்கம் கர்ச்சித்தது பாஞ்சாலத்தில் ஒரு சிங்கம்.

பாஞ்சாலச் சிங்கமாக அன்று பெற்ற தாய் நாட்டுக்காக வீறு கொண்டெழுந்தார் லாலா லஜபதிராய்

அவருக்குப் பக்கத் துணையாக நின்றார் அஜித் சிம்மன் லாலா லஜபதிராயையும் அஜித் சிம்மனையும் ஆங்கிலேய அரசு நாடு கடத்திப் பர்மாவில் தடுப்புக்காவலில் வைத்தது

அங்கு காவலில் வைக்கப்பட்டிருந்தபோதே

(வளரும்)

---

## பக்தாவிற்கு ஏற்ற --

(3ம் பக்கத் தொடர்ச்சி) ஷோடச உபசாரங்களெல்லாம் செய்விடத்து, முறைப்படி வழிபட்டு, தான் 12 வருடகாலம் பெற்ற ஆத்மீக அனுபவங்களை அன்னையின் திருவடியில் சமர்ப்பித்தார்

சிறி ராமகிருஷ்ணரிடம் அன்னையார் முதன் முதல் வந்ததும் 'என்னை, சம்சாரபந்தத்தில் ஆழ்த்தவா இங்கு வந்தாய்' என்று நேரடியாகக் கேட்டார் அதற்கு அன்னையார் அக்கருத்துக் கொண்டு யான் வரவில்லை நீங்கள் தேர்ந்து எடுத்துக்கொண்டுள்ள வாழ்வுக்கு

அன்னையார் இன்னும் ஓர் சந்தர்ப்பத்தில் சிறி ராமகிருஷ்ணருக்குச் சேவை செய்யும்பொழுது 'நீங்கள் என்னை எவ்வாறு கருதுகிறீர்கள்' என்று கேட்க ராமகிருஷ்ணர் உடனே 'ஆலயத்தில் தேவியாக வீற்றிருப்பவளும், என்னைப் பெற்றெடுத்த தாயும் நீயும் ஒன்றே மாதாவே ஆவீர்கள்' என்றார்.

பெண்மக்கள் எப்பொழுதும் பேதைத்தனமான பின்னணியிலே நிற்க வேண்டுமென்று அன்னையார் கருதியதே இல்லை. 'பொது நலத் தொண்டுகளில் ஈடுபட்டு இறங்கி செயல்படவேண்டும். அந்தப்புரத்துக்குள்ளே மறைந்திருத்தல் கூடாது என்று பலரும் சரே கூறுவார் அன்னையின் அருகில் எவரும் அச்சமின்றிச் செல்லலாம். சென்றதும் பயபக்தியும், அன்பும், அடக்கமும் அவர்களிடம் குடிகொண்டுவிடும்

இத்தகைய ஒரு புதுமைப்பெண் சாரதா தேவியாரே. அன்னையார் எவரிடமும் மிகையாகப் பேசமாட்டார். எச்சந்தர்ப்பத்திலும் உயிரும் பொருளும் பற்றிய இன் சொற்களையே பேசுவார் இன்மொழியின் பேசி புண்பட்டோர் உள்ளத்திற்கு ஆறுதல் கொடுப்பார் மன வலிமையற்றோருக்கு உறுதியைக் கொடுப்பார்.

பெண்மை நிறைநிலையுடைய அன்னையார் பெண் குலத்திற்குச் செய்த நல்லுபதேசங்கள் பெருமையும், பொருள் உண்மையும் நிறைந்தவையாகும் *

---

## பாட்டுக்குப் பாட்--

(6-ம் பக்கத் தொடர்ச்சி) வேனே வா வா ஓடிவா!' என அழைக்கும் கவிஞன்—

'வா வா வசந்தமே'

'வசந்தமே இனி எந்நாளும்'

என்றெல்லாம் ஒரு வேற்று நம்பிக்கை தருவான்.

'வசந்தம் வந்தால் கொடிகளிலே மலரும் மலர்கள் ஆயிரமே' எனக் காட்டும் அவன்—

'வரவேண்டும் வாழ்க்கையில் வசந்தம் - அது தரவேண்டும் வாழ்க்கையில் இன்பம்'

என வேண்டுகின்றான் வாழ்த்துகிறான்.

(மிகுதி அடுத்த வாரம்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## அன்பான வேண்டுகோள்!

உள்ளூர் மூலப்பொருட்களை உற்பத்திக்கு எடுப்போம்
உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவு கொடுப்போம்.
மில்க்வைற் தயாரிப்புகளுக்கு
நீங்கள் கொடுக்கும் ஆதரவு நாட்டின்
நற்பணிக்கே.

**மில்க்வைற்-யாழ்ப்பாணம்.**



# சஞ்சீவி

20 - 12- 1986 சனிக்கிழமை




## 'சேமியுங்கள்'

**மாணவமணிகளே!**

உங்கள் அபிமானத்துக்குரிய மில்க்வைற் நீலசோப் மேலுறைகள் 25 அனுப்பி மில்க்வைற் அப்பியாசக் கொப்பி ஒன்றைப் பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற்-யாழ்ப்பாணம்.**

விடுவிக்கப்பட்ட சிப்பாய்களை கோட்டை முகாம் வாசலில் புலிகள் இயக்கப் போராளிகள் வழியனுப்பி வைக்கும் காட்சி.

புலிகள் தாக்குதல்

# பன்குளத்தில் 7படையினர்பலி

திருகோணமலை டிச 20

திருகோணமலை மாவட்டத்தில் பன்குளம் இராணுவ முகாமுக்கு 200 யார் தொலைவில் உள்ள சென்றி நிலை மீதுநேற்றுக் காலை ஆறுமணி அளவில் தமிழீழ விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலின்போது ஏழு சிப்பாய்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

ஐந்துபோர் காயமடைந்தனர்.

பல ஆயுதங்களும், தலைக் கவசங்களும் மீட்கப்பட்டன.

சுமார் இரண்டு மணி நேரமாக நடைபெற்ற இத் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத சிப்பாய்கள் பின் வாங்கிச் சென்றனர்.

கொல்லப்பட்ட படையினரின் சடலங்கள் அந்த இடத்திலேயே கிடப்பதாக அறியவருகிறது.

இத் தாக்குதலின் போது கொல்லப்பட்ட 3 பேர் ஊர்காவல்படையைச் சேர்ந்தவர்கள், ஒருவர் பொலிஸ் கான்ஸ்டபிள். ஏனைய மூவரும் சிப்பாய்கள்.

சொல்லப்பட்ட சிப்பாய்களின் விவரம்:-

கான்ஸ்டபிள் சரத் பந்துல, (களுத்துறை) பி. ஏ. எம். குலதுங்க (மனிதின்ன), ஏ. ஐ. ஆர். அபயசிங்க, (மொரட்டுவ), பி. கே விக்ரமசிங்க (வெலிப்பின்ன)இம் மூவரும் இராணுவ சிப்பாய்கள்.

ஊர்காவல் படையினரின் விவரம் வருமாறு:-

உபாலி ரணவீர, டபிள்யூ ஏ. சரத். ஆர். ஏ பிரேமதாஸ

காயமடைந்தோரில் இருவரின் விவரம் வருமாறு:-

கான்ஸ்டபிள் ஜெயதிலக, அனுரமானே

இத்தாக்குதலின் போதுபுலிகளினால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

- 3 ஏ. கே. ரைபிள்கள்.
- 1 எஸ்.எல் ஆர். றைபிள்.
- 2 ஷொட்கன்கள்,
- 1 றிபபிட்டர்கள்.
- 14 மேலதிக ஏ. கே. றைபிள் ரவைக்கூடுகள்,
- 4 மேலதிக எஸ். எல். ஆர். ரவைகூடுகள்.
- 340 ஏ. கே. ரைபிள் ரவைகள்.
- 120 எஸ். எல். ஆர். ரைபிள் ரவைகள்.
- 34 தோட்டாக்கள்.
- பராலைட் 1.
- ரி. என், ரி. கிரனைட்டுகள் 3.
- ஹெல்மெட்டுகள்
- சப்பாத்துகள்

(உ-10)

## விஜேக்கு நன்றி

யாழுப்பாணம், டிச. 20

கைதிகள் விடுவிப்புக்கு பெரிதும் உழைத்தவர் விஜய குமாரணதுங்க அவருக்கு எமது மனமார்ந்த நன்றிகள். அவரது முயற்சிகளை நாம் என்றும் மறக்கமுடியாது - இப்படிக் கூறினார் புலிகள் தளபதி கிட்டு.

நேற்று நடந்த கைதிகள் பரிமாற்றத்துக்கு பின்னர் செய்தியாளர்களுடன் பேசியபோதே அவர் இதனைத்தெரிவித்தார்.

தெற்கில் விஜே மேற்கொண்ட அரசியல் பிரசாரமும் --

அதன்மூலம் அரசுக்கு ஏற்படுத்திய நெருக்குதலுமே கைதிகள் பரிமாற்றத்திற்கு அரசு விரைவில் இணங்குவதற்கு வழிகோலியது. — இப்படிச் சொன்னார் கிட்டு.

## பெரும் பிரசாரம்

யாழ்ப்ணபாம், டிச 20

கைதிகள் பரிமாற்ற விடயம் புலிகளுக்கு பெரும் பிரசாரத்தை தேடித்தந்திருக்கிறது.

தெற்கில் இத்தகைய பிரசாரம் ஒன்றை வேறு வழியில் செய்வதாயின் பல லட்சங்கள் செலவழிக்க வேண்டியிருந்திருக்கும்.

—இப்படிக் கருத்து வெளியிட்டார் கிட்டு

சிங்கள மக்கள் மத்தியில் புலிகள் பற்றிய நல்லெண்ணத்தை வளர்க்கவும் இது வழி கோலியிருக்கிறது

சாதாரணமாக எமது பிரசார விடியோக்கள் படங்கள், துண்டுப்பிரசுரங்கள் ஆகியவற்றை தெற்கில் உள்ளவர்கள் வைத்திருக்க அல்லது பார்க்கப் பயப்படுவார்கள்

அவ்வளவு இறுக்கமான கண்காணிப்பு அங்கு இருக்கிறது

அதற்கு மத்தியில் எமது பிரசாரத்தை மேற்கொள்வது மிகுந்த கஷ்டமான காரியமாகும் முடியாத காரியமும் கூட

ஆனால் கைதிகள் விடயத்தினால் எமதுவிடியோக்கள், துண்டுப்பிரசுரங்கள் போன்றவை தெற்கில் தாரளமாக மக்கள் மத்தியில் புழங்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது இப்படி அவர் மேலும் கூறினார். (உ-5-10)

## இனப்பிரச்சினை:

# பேச்சுக்கள் குறித்து

## இந்தியக் குழுவினரின் கருத்து

கொழும்பு, டிச. 20

நடந்து முடிந்த பேச்சுக்கள் வெற்றி என்று சொல்ல முடியாது; தோல்வி என்றும்சொல்ல முடியாது அவை நடுப்பதையில் தான் சென்றன.

கொழும்பில் சிதம்பரம் குழு நடத்திய பேச்சுக்கள்குறித்து இந்தியத் தூதரக அதிகாரிகள் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டனர்.

பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை பேச்சுக்கள் தொடரும். அந்த நிலைதான் இன்னும் நிலவுகிறது இப்படிஇந்தியத் தூதரக அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

முஸ்லிம் எம். பிக்களுடனும்

மூன்றும் கட்டப் பேச்சுக்களை ஜனாதிபதியுடன் ஆரம்பிக்கும் முன்னர், சிதம்பரம் குழு, கிழக்கு மாகாண முஸ்லிம் எம் பிக்களுடன் தொண்ணூறு நிமிடங்கள் வரையில் பேச்சுக்களை நடத்தியது

சம்மாந்துறை எம். பி அப்துல் மஜீது, பொத்துவில் எம். பி உதுமா லெப்பை, கல்முனைஎம் பி ஏ.ஆர். மன்சூர், மூதூர் எம்.பி எம். இ. எச் மஹ்ரூப், மட்டக்களப்புஎம். பி றிஸ்வி சின்னலெப்பை ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர் (உ-எ)

## தமிழ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மொழியால், கலாசாரத்தால் இணைத்து அவர்கள் அவற்றைப் பேணவும் வளர்க்கவும் தமிழ் வங்கி உதவ வேண்டும்.

வங்கியில் நிதி இருந்தால் எல்லாம் நடந்து விடுமா? தமிழ் அபிமானிகளும், ஆர்வலர்களும், வித்தகர்களும் தமிழ் அன்னைக்குத் தொண்டு செய்யத் தம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

நிதிவளம் இல்லையே என்று கவலை இருந்தது இதுவரை. இனி அது இல்லை.

தமிழ்த் தொண்டு தொடங்கட்டும். தமிழ் அன்னை மகிழட்டும் என்றும் அவள் சுமங்கலியாய் வாழட்டும்.

# யாழ் மாநகர சபைக்கு

## 60 லட்சம் ரூபா வருமான வீழ்ச்சி

### வரவு செலவுத்திட்ட உரையில் ஆணையாளர்

யாழ்ப்பாணம், டிச. 20

நாட்டில் நிலவும் பிரச்சினைகளால் யாழ் மாநகரசபையின் வருமானம் கடந்த சில ஆண்டுகளிலும் பார்க்க 60 லட்சம் ரூபாவால் குறைந்துள்ளது என யாழ் ஆணையாளர் திரு. சி.வி. கே. சிவஞானம் கூறினார்.

1987ஆம் ஆண்டுக்கான யாழ். மாநகர சபையின் உத்தேச வரவு செலவுத் திட்டம் பற்றிய கலந்துரையாடல் நேற்று நடைபெற்ற போது அங்கு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்

அவர் மேலும் கூறியதாவது யாழ் கோட்டை முகாமை சுற்றியுள்ள பல குடும்பங்கள், வர்தக ஸ்தாபனங்கள் இடம் பெயர்ந்ததால் பெருமளவு ஆதன வரி வருமானத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

காணி கை மாறல் தீர்வை வருமானம் 8 லட்சம் ரூபாவால் குறைந்துள்ளது.

வாகனப் பதிவால் 60 ஆயிரம் ரூபா வருமானம் வந்த இடத்தில் 4 ஆயிரம் ரூபா வருமானமே கிடைக்கிறது.

கடல் வலயச் சட்டத்தாலும், பெரிய கடைகளின் பாதிப்பாலும் சந்தைக் குத்தகை, கடை வாடகை வருமானம் ஆகியவை பெருமளவு குறைந்துள்ளது.

82ஆம் ஆண்டு களியாட்ட வரியாக 31லட்சம் ரூபா அறவிடப்பட்டது. தற்போது 3 லட்ச ரூபா கூட அறவிட முடியாத நிலையில் உள்ளது.

இதனால் அடுத்தவருட வரவு செலவுத் திட்டத்தில் 51 லட்ச ரூபாய் வரை பற்றுக்குறை ஏற்படவுள்ளது இப்படி அவர் கூறினார். (உ-5)

## கொத்தலா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாய் பண்டாரவை கைத்தாங்கலாக முகாம் வாசலுக்கு அழைத்துவந்தார்.

அவருக்கு முன்னால் அஜித் முகத்தில் மகிழ்ச்சி பொங்கநடந்து வந்தார்.

முகாம் வாசலில் இருவரையும் காப்டன் கொத்தலாவலைபொறுப்பெற்று அழைத்துச்சென்றார். (உ-10-5)

## முஸ்லிம்களுக்கு ஆயுதங்கள்!

திருகோணமலை, டிச. 20

திருகோணமலை இறக்கக்கண்டி முஸ்லிம்களுக்கு பாதுகாப்புப் படையினர் ஆயுதங்கள் வழங்கியுள்ளனர் என்று தெரிகிறது.

அப்பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் ஆசிரியரான இப்ராஹிம் என்பவர் இனந்தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (உ-எ-150)

## புலிகளை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. வின்சன்ட் டயஸ் கூட்டுப்படைகளின் தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்க, இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் நளின் செனிவிரத்தின, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சேபால ஆட்டிகல ஆகியோரும் விமானத்தில் வந்தனர்.

புலிகள் தரப்பு போராளிகள் இருவரையும விடுவிப்பதற்காக பலாலி இராணுவ முகாமின் வாசல்வரை வந்தஅமைச்சர் அத்துலத்முதலி அங்கு வைத்து அவர்கள் இருவருடனும் நட்புணர்வுடன் அளவளாவினார்.

பின்னர் விடுவிக்கப்பட்ட புலிகள் அவர்களது சகாக்களிடம் சென்றடையும்வரை பலாலி முகாம் வாசலில் இருந்து லலித் அதனைப் பார்வையிட்டார்.

பலாலி முகாமுக்கு அருகில் தமது சகாக்கள் இருவரையும் எதிர்நோக்கிக் காத்திருந்த விடுதலைப்புலிகள் தூரத்தில் அமைச்சர் அத்துலத்முதலியைக் கண்டதாகவும் —

அமைச்சர் அத்துலத்முதலியும் நவீன ரக ஆயுதங்களுடன் நடமாடிய விடுதலைப் புலிகள் தளபதி கிட்டு, அரசியற் பிரிவுப் பொறுப்பாளர் திலீபன், ஏனைய புலிகள் இயக்கப் போராளிகள் ஆகியோரைக் கண்டதாகவும் தெரியவருகிறது. (உ10-5)

## முன்னேற்றம்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

த்து கிழக்கின் ஏனைய பகுதிகளை தமிழ் பேசும் மாகாணமாக்கலாம் என்ற நிலைப்பாட்டை இலங்கைத் தரப்பினர் எடுத்துக்கொண்டனராம்.

எப்படியிருந்தும் தமிழர் தாயகமாக இரண்டு மாகாணங்களையும் ஏற்க முடியாது என்று இலங்கைக்குழு சிதம்பரம் குழுவிடம் தெரிவித்ததாம்.

அப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டால் அது வருங்காலத்தில் பலபிரச்சினைகளுக்கு வித்திடும் என்று ஜனாதிபதி தெரிவித்ததாகவும் சொல்லப்படுகின்றது.

மூன்றுநாள் பேச்சுக்கள் முடிவு எதுவும் இல்லாமலே முடிவடைந்தன என்று அரசியல்வட்டாரங்கள் நேற்றுத்தெரிவித்தன.

இந்தியக் குழுவுக்கு நேற்று ஜனாதிபதி மதிய போசன விருந்து அளித்துக் கௌரவித்தார். (அ-ஐ-எ)

## விடைபெறமுன் அளித்த உறுதி

யாழ்ப்பாணம், டிச 20

தமிழீழ விடுதலைப்புலிகள் என்னைக்காப்பாற்றி இவ்வளவு காலமும் அன்புடன் வைத்து பராமரித்ததற்கும் அவர்களது பெருந்தன்மைக்கும் நன்றிக்கடனாக நான் இராணுவத்தில் சேரமாட்டேன் என உறுதி அளித்துள்ளேன்.

புலிகளிடம் இருந்து விடைபெற்ற வேளையில் கோட்டை வாசலில் வைத்து எமது செய்தியாளர் அஜித் சந்திரசிறியுடன் பேசியபோது அவர் இப்படித் தெரிவித்தார்.

இறுதியாக நீங்கள் என்ன கூறவிரும்புகிறீர்கள் என்று கேட்ட போது —

தொடர்ந்தும் இராணுவத்தில்சேரப்போகும் இளைஞர்களுக்கு நான் பல புத்திமதிகளைக் கூறமுடியும் என்றும் அவர் சொன்னார்.

பண்டாரவிடம் இதே கேள்விகளைக் கேட்ட போது அவரும் நிச்சயமாக இனிமேல் நான் இராணுவத்தில் சேரமாட்டேன் என்றார். (உ-10)

## புதியநம்பிக்கை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செனிவிரத்தன எட்டியாந்தோட்டை எம்.பி திரு வின்சன்ட் பெரேரா ஆகியோரும் வந்திறங்கினர்.

சிப்பாய்கள் விடுவிக்கப்படுவது பற்றி அவர்களின் உறவினர்களுக்கு பாதுகாப்பு அமைச்சு முன்கூட்டியே அறிவிக்கவில்லை. அதனால் அவர்களின் உறவினர்கள் விமான நிலையம் வரவில்லை.

இரண்டு சிப்பாய்களும் அக்கறையற்றவர்கள் போல் விமான நிலையத்தில் காணப்பட்டனர்.

**அமைச்சர் கருத்து**

கொழும்பு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் விமான நிலையத்தில் குழுமியிருந்தனர்.

அவர்கள் மத்தியில் அமைச்சர் லலித் அத்துலத்முதலி கூறியதாவது:-

சிப்பாய்கள் - புலிகள் விடுதலை கைதிகள் பரிமாற்றம் அல்ல.

நிபந்தனையின் பேரில் இவ் விடுதலை இடம்பெறவில்லை

நல்லெண்ணத்தின் அடிப்படையில் சிப்பாய்கள் விடுவிக்கப்பட்டனர். நாமும் அந்த நல்லெண்ணத்தைச் செய்கையில் பதிலாகக் காட்டினோம்.

இதன் மூலம் யுத்தம் ஒன்றை நடத்தும் இரண்டு தரப்பிலும் புதியதொரு நம்பிக்கை உணர்வு தோன்றியுள்ளது.

இது மேலும் முன்னேற்றத்திற்கு வழி கோலக்கூடும்.

எப்படியான முன்னேற்றங்கள் அவை என்பதை நான் இப்போது கூற விரும்பவில்லை.

சிப்பாய்கள் விடுதலை குறித்து எவரும் பெருமை தேட முடியாது.

கொழும்பில் நடைபெறும் இனப்பிரச்சினைப் பேச்சுக்களுக்கும் சிப்பாய்கள் விடுதலைக்கும் தொடர்பு எதுவும் இல்லை.

அரசினால் விடுவிக்கப்பட்ட இரண்டு போராளிகளில் ஒருவரான காமினி, தீவிரவாதிகள் பற்றி தகவல் தெரிவிக்கத் தவறியதற்காக நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவர். அவர் சில தினங்களில் விடுதலை செய்யப்படவிருந்தார்.

செல்லக்குமார் என்ற இரண்டாவது போராளி மீது வழக்குத் தாக்கல் செய்யப் போதுமான சாட்சியங்கள் கிடையா என்று சட்டமா அதிபர் அறிவித்துவிட்டார்.

அவர்கள் இருவரையும் தான் நாம் விடுவித்துள்ளோம்.

இவர்கள் விடுதலை குறித்து இரகசியப் பேச்சுக்கள் இடம் பெற்றன. ஒரு தமிழ்க் கனவான் தான் இதில் முக்கிய பங்கு வகித்தார். அவரின் பெயரை நான் வெளியிட விரும்பவில்லை.

இரண்டு சிப்பாய்களும் நியாயமான முறையில் பராமரிக்கப்பட்டனர் என்பது தெரிகிறது —

இப்படி அமைச்சர் லலித் அத்துலத்முதலி செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார். (அ-எ)

## கைதிகள்--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அருகில் சிறைவைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் முக்கிய போராளிகளான செல்லகுமார் (குஞ்சு). காமினி ஆகியோர் படையினரால் விடுவிக்கப்பட்டனர்.

அதேவேளை யாழ். கோட்டை இராணுவ முகாம் வாசலில் புலிகளினால் பிடிக்கப்பட்ட இரண்டாவது லெப்டினன்ட் அஜித் சந்திரசிறி, சிப்பாய் பண்டார ஆகியோர் விடுவிக்கப்பட்டனர்.

இரு தரப்பினரும் தமது வாக்கிடோக்கிகள் மூலம் இருதரப்பு விடுதலையையும் உறுதி செய்து கொண்டனர். (உ-10-5)

## சயனட் குப்பி---

(7ம் பக்கத் தொடர்ச்சி)

பதிவு செய்தார்கள்.

**பலாலிக்கு**

பின்னர் வியாழக்கிழமை இரவு இராணுவப் பாதுகாப்புடன் இரத்மலானை விமான நிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டேன்.

அங்கிருந்து நேற்று மாலையே விமானம் மூலம் பலாலிக்கு என்னைக் கொண்டு வந்தார்கள்.

இன்று அதிகாலை 7 மணியளவில் அமைச்சர் லலித் அத்துலத்முதலி பலாலி முகாமுக்கு வந்தார்

அவர் என்னுடனும், காமினியுடனும் சிறிது நேரம் கதைத்தார்.

அதன் பின்னர் லலித் சகிதம் எங்களை பலாலி இராணுவ முகாம் வாசலுக்கு கொண்டுக் வந்தனர்.

முகாம் வாசலில் லலித்தும் ஏனையோரும் நின்று கொண்டனர்.

லலித்துடன் விமானத்தில் வந்த திரு. ஜெயபாலசிங்கத்துடன் என்னையும் காமினியையும் சேர்த்து அமைச்சர் லலித்தும் ஏனைய அதிகாரிகளும் வழியனுப்பி வைத்தனர்.

காலில் காயம்பட்டிருந்த என்னை 'நடந்து போகமுடியுமா? 'என்று விசாரித்தார் அமைச்சர் லலித்.

எனது தோழர் காமினியுடன் அவர் சிறிது நேரம் சிங்களத்தில் அளாவளாவினார்

அதன் பின்னர் பலாலி முகாமைவிட்டு வெளியே நடந்து வந்த எம்மை புலிகள் தளபதி கிட்டுவும் ஏனையோரும் வரவேற்றனர்.

—இப்படி செல்லக்குமார் கூறினார். (அ - உ)

## விடுவிக்கப்பட்ட - காமினி பேட்டி

# சிங்களவருக்கு பிறந்த நீ இனத்துரோகி என கூறி தாக்குவார்கள்

யாழ்ப்பாணம் டிச. 20

சிங்களவருக்குப் பிறந்த நீ, எங்கள் இனத்தின் துரோகி என்று கூறி என்னைத் தாக்குவார்கள். பல சந்தர்ப்பங்களில் கூரையில் கட்டித் தொங்கவிட்டும் தாக்குவார்கள்.

இப்படிக் கூறினார் கைதிகள் பரிமாற்றத்தின்போது விடுவிக்கப்பட்ட இரண்டாவது புலிகள் இயக்கப் போராளி காமினி.

காமினியின் தகப்பனார் ஒரு சிங்களவர். அவரது பெயர் பொடி அப்புஹாமி (பேபி) மாத்தறை அக்குரஸ்ஸையைச் சேர்ந்தவர்.

தாயார் திரேஸம்மா தமிழர். கிறிஸ்தவர்.

19 வயது இளைஞரான காமினி கைது செய்யப்பட்ட சமயம் யாழ்ப்பாணம் சிங்கள மகாவித்தியாலத்தில் கல்வி பயின்று கொண்டிருந்தவர்.

அவர் சஞ்சீவிக்கு அளித்த பேட்டியின் போது கூறியதாவது:-

1985 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி குருநகர் இராணுவ முகாமுக்கு அருகில் நடைபெற்ற சம்பவத்தின்போது நான் கைது செய்யப்பட்டேன்.

இந்தச் சம்பவத்தில் தான் புலிகள் இயக்கத்தின் முக்கிய போராளி வாசு இராணுவத்தின் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

கைது செய்யப்பட்ட பின்னர் குருநகர் முகாமிலும் மற்றைய இடங்களிலும் வைத்து பல தடவைகள் சித்திரவதைக்கு இலக்கானேன். சிப்பாய்கள் என்னைப் பல சந்தர்ப்பங்களில் கூரையில் கட்டித் தொங்கவிட்டுத் தாக்கினார்கள்.

சிங்களவருக்குப் பிறந்த நீ, சிங்கள



இனத்தின் துரோகி என்று கூறியே அவர்கள் என்னைத் தாக்குவார்கள்.

நான் போராட வேண்டும் எனது தந்தை சிங்களவராக இருக்கலாம் ஆனால் ஒடுக்கப்பட்ட எமது மக்களுக்காக —தமிழர்களுக்காக— நான் போராட வேண்டியது அவசியம் என உணர்கிறேன்.

அவர்கள் அப்படித் தாக்கியபோதெல்லாம் எனது மக்களுக்காக நான் போராட வேண்டும் என்ற வெறியே என்னிடம் பீறிட்டு எழுந்தது என்று சொன்னார்

இவருக்கு எதிரான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு கடந்த 27 ஆம் திகதி 2 மாதச் சிறைத் தண்டனைத் தீர்ப்பு விதிக்கப்பட்டது. ஜனவரி 16 ஆம் திகதி இவர் விடுவிக்கப்பட இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-உ)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது திகதி: 20 - 12 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power-House Road, JAFFNA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org